ஆனந்த விகடன்

10-10-43

DIGITIZED

ஆனந்த விகடன்

OCTOBER 1943

விலை அணா நான்கு

…DA VIKATAN MADRAS

N26e
3.18.41
208577

…க்டர் :— "காட்டு மிருகங்களுக்கு நடுவிலே அகப்பட்டுண்டாப் போலே கற்பனை பண்ணிண்டு நடிக்கணும், தெரியுமா —"

ஸன்லைட் கெமிஸ்டு
சொல்லுகிருர் . . .

"அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தானுகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் "பிராணசக்தி" வாய்ந்த சோப் இருக்கிறது. 'பிராணசக்தி' வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினுல் கசக்கினுல் இந்த 'பிராணசக்தி' யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன், அழுக்குப் போய்விடுகிறது."

ஸன்லைட் சோப்



சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 62-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

ஜெமினி
பாலநாகம்மா

13 OCT 1943

சென்னை (பெரம்பூர்)	-	ஸரஸ்வதி	38வது வாரம்
வாரங்கல்	-	விக்டரி	32வது வாரம்
பெத்தாபுரம்	-	சோமராஜு	9வது வாரம்
தும்கூர்	-	கிருஷ்ணா	8வது வாரம்
திண்டுக்கல்	-	பீஸ்	8வது வாரம்
தர்மாவரம்	-	பஸீத்	5வது வாரம்
பொன்னமராவதி	-	வி.டி. டாக்கீஸ்	5வது வாரம்
அருப்புக்கோட்டை	-	கோமதி	4வது வாரம்
ஹிந்துப்பூர்	-	லக்ஷ்மி	3வது வாரம்
கூடூர்	-	குளோப்	3வது வாரம்
உரவகொண்டா	-	ராமகிருஷ்ணா	3வது வாரம்
ஆரணி	-	லக்ஷ்மி	3வது வாரம்
ஹைதராபாத்	-	அர்காஸ்	3வது வாரம்
பெரியகுளம்	-	ரஹீம்	2வது வாரம்
ராசிபுரம்	-	பாலசுப்ரமண்யா	2வது வாரம்
சாத்தூர்	-	வஸந்தா	2வது வாரம்
வந்தவாசி	-	ராஜலக்ஷ்மி	2வது வாரம்
ஜோலார்பேட்டை	-	மாணிக்ப்ரபு	2வது வாரம்
லால்குடி	-	நடராஜா	7-10-43 முதல்

கூடிய சீக்கிரம் வருகிறது :

ஜானகிராம் டாக்கிஸ்	-	மாம்பலம்
டிப் டாப் டாக்கீஸ்	-	கோபிசெட்டிபாளையம்
எஸ். எஸ். டாக்கிஸ்	-	திருச்செங்கோடு

1—1010

கீர்த்தி வாய்ந்த தாய்நாட்டு ஸோப்

புத்துயிரளிக்கும் வத்னியால் மாசு மனச் சோர்வை அகற்றி ஆரோக்யமாயும் சந்தோஷமாயும் இருங்கள்.

எதேஷ்டமானதும், பால் போன்றதுமான அதன் தாவர எண்ணைப் பசையினால் தூய வெண்மை பெறுங்கள். குழந்தையின் சரும போஷணைக்கும் ஏற்ற இது. மேனிக்கு இதத்தையும், தூய்மையையும், அழகையு மளிக்கிறது. வத்னியின் இளம் மணமோ அலங்கரித்துக் கொள்வதில் உங்களுக்கோர் குதூகலத்தை விளைவிக்கும். இப் பெரிய ஸோப்பானது சிறு துணுக்காகும் வரை புதுமையும் நறுமணமும் பொருந்தி யிருக்கும். மற்றவை வாக்களிக்கும் குணங்களை வத்னி நிரூபிக்கும். இவ்வளவு சிறப்பிற்கும் இது நயமானதே. உங்கள் சரீரத்தில் பரீட்சையேன்? ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்பான வத்னியையே கைக்கொள்ளுக.

நெ. 1. நெ. 2.
'வத்னி'
ஸாண்டல்
லிம்டா. பாமெலி
டர்க்கிஷ் பாத்
ஷேவிங் ஸ்டிக்
ஷேவிங்
'ரவுண்ட்'

100 சதமான தூய்மைக்கும், மிருகக் கொழுப் பற்ற தென்பதற்கும் வாக்குறுதி.

Godrej Vatni

கோத்ரெஜ் சாவி மார்க் **வத்னி**

ஸ்நான ஸோப்

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.
மதராஸ் (164, பிராட்வே)
கோயமுத்தூர். (3, தாமஸ் வீதி)

நேர்த்தியானவை

கம்பீரத் தோற்றம் அணிவதற் கேற்ற யோக்கியதை நீடித்த உழைப்பு.

அரவிந்த் ஷர்ட்டிங்குகளும், டுவில்களும் நேர்த்தியான வேலைப்பாடுகளுக்கு பிரபலமானவை.

அரவிந்த்

ஷர்ட்டிங் & டுவில்

நேர்த்தியான துணிகள் வாங்க இக்குறியை உமது வழிகாட்டியாகக் கொள்ளவும்

அரவிந்த் மில்ஸ்

AV. 4

Sunshine **Glaxo**

ஸன்ஷைன் கிளாக்ஸோ

13 OCT 1943

உங்கள் குழந்தையின் பாதுகாப்பிற்காக

கிளாக்ஸோவில் நிறைந்துள்ள வைடமின் டி கணைச்சூட்டைத் தடுப்பதாலும், அதிலுள்ள அயம் சிசுக்களின் ரத்தமின்மையைத் தடுப்பதாலும் கிளாக்ஸோ சிறந்த சிசு ஆகாரமாகிறது.

எப்போதும் **புதிதாகவும்** எந்த சீதோஷ்ணத்திலும் **பத்திரமாகவும்** இருப்பது

சாதாரண பால் மூலம் ஏற்படும் சீதபேதி, வயிற்றுப் போக்கு, டைபாய்ட் முதலியவைகள் கிளாக்ஸோவில் கிடையாது.

எங்கும் கிடைக்கும் இதன் விலையை முதலாளிகள் உயர்த்தவில்லை.

G8

அரண்போன்ற தேகம் என்ருல் வீர்யம் மிகுந்த ஆரோக்யம்



தேகத்தில் சக்தி குறைந்துபோனால் நீங்கள் எளிதில் சோர்வடைகிறீர்கள். உற்சாகமாக வேலை செய்யவோ, வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கவோ முடிவதில்லை. ஜலதோஷம் முதலிய தொல்லைகளுக்கு எளிதில் ஆளாகிறீர்கள். புத்துயிர் அளிக்கும் தன்மையுடைய வாட்டர்பரீஸ் காம்பௌண்ட் நீங்கள் சாப்பிடவேண்டும். இது நல்ல பசியை அளித்து, தேகம் முழுவதிற்கும் வலுவூட்டி, ஜலதோஷம் முதலிய தொல்லைகள் உங்களை அணுகாமல் பாதுகாத்து, உங்களை யௌவனமாகவும் சுறுசுறுப்புடனும் இருக்கச் செய்யும். இன்றே வாட்டர்பரீஸ் சாப்பிட ஆரம்பித்து, உங்கள் ஆரோக்யத்தைப் பாதுகாருங்கள்.

வாட்டர்பரீஸ் காம்பௌண்ட்

உங்களை ஆரோக்கிய நிலையில் இருக்கச் செய்யும்

83U

விருத்தாப்பியத்தில் மன அமைதி

நேஷனல் இந்தியன் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிட்.

ஹெட் ஆபீஸ் :
மெர்கன்டைல் பில்டிங்ஸ்,
9, லால் பஜார், கல்கத்தா.
மதராஸ் ஆபீஸ் :
334, தம்புசெட்டி தெரு, மதராஸ்

தூத்துக்குடி ஆபீஸ் :-
233, க்ரேட் காட்டன் ரோட்,
தூத்துக்குடி.

ஹைதராபாத் ஆபீஸ் :-
1101, சுல்தான் பஜார், ஹைதராபாத் (டெக்கான்)

NIL. 6

YOUR LUCK FREE

Simply name any flower or letter writing time together with -/5/- stamps advance. Your 12 months reading concerning Health, Wealth, Lottery, Races, Profession, Love, Marriage, Friends, Enemies, causes and remedies of failures and worries will be foretold. Any two future questions will be answered FREE.

PROF. COMAR, P. B. 149, LAHORE

ADVERTISEMENT

IN THIS COLUMN

PAYS -

PAYS TENFOLD!

Write for Advt. Rates to:
The Advertisement Manager,
ANANDA VIKATAN
P. B. 119, — MADRAS

'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'— என்பது நமது கவி சி. சுப்பிரமணிய பாரதியாருக்கு மட்டுமல்ல, தமிழ்த் தொண்டு ஆற்ற விரும்பும் அவ்வளவு பேருக்குந்தான். உங்கள் உள்ளத்தில் 'தமிழ்ப் பணி'யெனும் அக்னியை, பாரதி நூல்களைப் படித்து வளருங்கள்.

பாரதி நூல்களில் சில

1.	பாரதி கவிதைகள்		...	ரூ.	3	8	0
2.	,, வசனங்கள்		...	,,	3	8	0
3.	,, கட்டுரைகள்		...	,,	3	8	0
4.	,, பகவத் கீதை		...	,,	0	7	0
5.	பாஞ்சாலி சபதம்		...	,,	0	8	0
6.	ஸ்வசரிதையும் பிற பாடல்களும்		...	,,	0	10	0
7.	சந்திரிகையின் கதை		...	,,	0	8	0
8.	நவ தந்திரக் கதைகள்		...	,,	0	6	0
9.	கதைக் கொத்து		...	,,	0	8	0
10.	கட்டுரைகள் :—	1. தத்துவம்	...	,,	0	10	0
		2. மாதர்	...	,,	0	8	0
		3. கலைகள்	...	,,	0	8	0
		4. சமூகம்	...	,,	0	12	0

(தபால் செலவு பிரத்தியேகம்)

மெயில் ஆர்டர்ஸ், ஆனந்த விகடன், P. B. 119, மதராஸ்.

கரப்பானை குணப்படுத்த எக்ஸ்-மா (X-MA)



மற்றுமொரு நற்சாக்ஷி பத்திரம்

அன்பார்ந்த ஐயா,

தயவுசெய்து வி. பி. பி. மூலம் மற்றுமொரு ஜாடி எக்ஸ்-மா மெழுகும், ஒரு டின் வேர்க்குரு பௌடரும் அனுப்பிவைக்கவும்.

நான் முன்பு வாங்கின எக்ஸ்-மா மருந்து அதி விரைவில் குணமளித்தது. ஆகையால் எப்பொழுதும் கைவிருப்பில் ஒரு ஜாடி வைத்திருக்க எண்ணுகிறேன். இதில் ஏற்பட்ட நம்பிக்கை உங்கள் வேர்க்குரு பௌடரை உபயோகிக்கத் தூண்டுகிறது. மேலும் வேறு எதுவும் நிச்சயமாக குணமளிக்கவில்லை. இப்படிக்கு,

(ஒப்பம்)..................................

பிரசித்திபெற்ற ஸ்பென்ஸர் சரும வியாதி நிவாரணி, கரப்பான், மற்றும் அதுபோன்ற சரும வியாதிகளை நிவர்த்திப்பதில் கீழ்நாடெங்கும் பிரக்யாதி பெற்றது. ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்தவண்ணமிருக்கின்றன. இதன் அபார விற்பனையே இதன் குணத்திற்குச் சான்று.

முன்பு "ஸ்மித்ஸ் அங்குவென்டம் டெட்டர்ஜென்ஸ்" என வழங்கிவந்த மருந்து சருமத்தில் ஏற்படும் எல்லா உபாதைகளுக்கும் இதமளிப்பதில் சிறந்து விளங்கிற்று. இப்பொழுது எக்ஸ்-மா ஒன்றுதான் கரப்பான், வண்ணாரப் படை, வீக்கம் இவற்றிற்கு எரிச்சலின்றி குணமளித்து வருகிறது.

கைத்திட்டமான சைஸ் பாட்டில் ஒன்றுக்கு விலை **ரூ. 1/4/-**

உபயோகிக்கும் முறை வியாதியுற்ற பாகத்தில் காலையிலும், மாலையிலும் நன்றாகத் தேய்க்கவும். கூடுமானவரை காற்றுப் புகாவண்ணம் மிருதுவான துணியினால் மூடி வைக்கவும்.

ஸ்பென்ஸர் கம்பெனியாரால் மட்டுமே இது தயாரிக்கப்படுகிறது.

வியாபாரிகள் விவரங்களுக்கு எழுதவும்:

ஸ்பென்ஸர் & கோ., லிட்.

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ் :: சென்னை

THE TRUTH in YOUR HOROSCOPE

Your Real Life Told Free

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points, etc. ? Here is your chance to test FREE the skill of Pundit Tabore, India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation ? The accuracy of his predictions and the sound practical advice contained in his Horoscopes on Business, Speculation, Finances, Love-affairs, Friends, Enemies, Lotteries, Travels, Changes, Litigation, Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you FREE your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss.), address and date of birth (English Calendar) **all clearly written** by yourself. No money required for astrological work, but enclose about 6 annas (Stamps) to cover printing, stationery, postage etc. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. No personal interviews, all consultations by mail only. Address: PUNDIT TABORE (Dept. 321-G), Upper Forjett Street, Bombay 26.

மாலை 18] [மணி 41

Ananda Vikatan

அக்டோபர் **10**

எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன்
பராபரமே

கவனிப்பார்களா ? (படம்)	8
பட்டினிப் படையெடுப்பு ...	9
வாய்ச் சண்டை (படம்)	12
லோக சஞ்சாரம் ...	13
துக்கடா ...	15
யுத்த டயரி ...	17
சௌந்தரம்மாள் ...	21
புத்தக சாலை ...	27
நிலவில் நடந்த நாடகம் ...	30
பிரேம தீபம் ...	33
தபால்கார ரங்கையன்	40
ஜமீந்தார் பூனை ... (பாலர் மலர்)	46
விகடன் பேச்சு ...	48
வழிக்கு வந்த மாட்டுப் பெண் ...	49
தந்தையும் தநயனும்	52
"பகுத்தறிவு" 359	—
"பகுத்தறிவு" 353 முடிவு	

குறிப்பு:—"ஆனந்த விகட"னில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.



கவனிப்பார்களா ?

பட்டினிப் படையெடுப்பு

இந்தியாவுக்கு வைஸ்ராயாக வரப் போகும் வேவல் துரை லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, "இந்திய ஜனத் தொகை நாளுக்கு நாள் விஷம்போல் ஏறி வருகிறது. இதனால் அங்கு பொருளாதார நெருக்கடியும் நாளுக்கு நாள் முற்றி வருகிறது" என்று ரொம்பவும் கவலைப் பட்டாராம்.

வேவல் துரை இந்த மாதிரி கவலைப் பட்டிருக்க வேண்டியதே யில்லை.

ஏனெனில், அவரும் அவரைப் போன்ற இதர பிரமுகர்களும் நம்மை ஆட்சி புரிந்து வரும்போது அவர்களுக்கெல்லாம் மனக் கவலை உண்டு பண்ணும்படி, இந்திய ஜனத்தொகை பெருகி விடத் துணியுமா என்ன? இப்போது வங்காளத்தில் என்ன நடக்கிறதென்பதைச் சற்று அவரே பார்க்கட்டும்!

அந்த மாகாணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, ஆயிரம் ஆயிரமாக ஜனங்கள் செத்து மடிந்து வருவதை மட்டில் அவர் கவனித்திருந்தால் அந்த மாதிரியெல்லாம் கவலைப்பட வேண்டிய அவசியம் அவருக்கு நேர்ந்திருக்கப் போவதில்லை.

வங்க மாகாணத்தின் மீது பஞ்சம் படை யெடுத்து கிட்டத் தட்ட இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றன. இந்த இரண்டு மாத காலத்தில் மாகாண சர்க்காராகட்டும், மத்திய சர்க்காராகட்டும், பிரிட்டிஷ் சர்க்காராகட்டும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பது இன்று வரையில் வெளிப்படவே யில்லை.

பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டால், "அது இந்திய சர்க்கார் வியவகாரம்" என்று தெரிவிக்கிறது. இந்திய சர்க்காரின் சார்பாகப் பேசி வரும் அமெரி துரையைக் கேட்டால், "அது மாகாண சர்க்காரின் சொந்த விஷயம். அதில் நாங்கள் தலையிடுவது ஜனநாயக தர்மத்துக்கே விரோதம்!'" என்று கூறுகிறார். மாகாண கவர்னரோ, "இவை யெல்லாம் மந்திரி சபை கவனிக்க வேண்டிய காரியங்கள்" என்று தட்டிக் கழிக்கிறார். மந்திரி சபையைக் கேட்டால், "யாரோ சில வியாபாரிகள் உணவுப் பொருளை இப்படிச் சேமித்து வைக்கிறார்கள்!" என்று, கண்டு பிடிக்க முடியாத சிலர் மீது பழியைப் போடுகிறது.

எனவே, வங்காளப் பஞ்சத்துக்குக் காரணமான நிர்வாக 'ஊழல்' எங்கே இருக்கிறது என்று கேட்பதைவிட, எங்கே இல்லை என்று கேட்பதுதான் மிகப் பொருத்தமா யிருக்கும்.

இந்த நிர்வாக ஊழலுக்கு ஒரு சிறு உதாரணம் பார்ப்போம் :

கடந்த 4-ந் தேதி ஹிந்துப் பத்திரிகை 3-ம் பக்கத்தில் ஒன்றுக்கொன்று நேர்மாறான மூன்று செய்திகள் பிரசுரமாயிருக்கின்றன.

“உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்கும் இயக்கத்தை அனுசரித்து, நீலகிரி கலெக்டர் விவசாயிகளுக்குச் சில சலுகைகள் காட்டியிருக்கிறார். இதன்படி 20 ஆயிரம் ஏகர் நிலம் இன்னும் அந்த ஜில்லாவில் சாகுபடி செய்யப்படும்.”

“ஏற்றுமதி செய்யப் போக்குவரத்து வசதியில்லாமல் 25,000 டன் உருளைக் கிழங்கு மேட்டுப் பாளையத்தில் கிடங்குகளில் குவிந்து போய் அழுகி வருகிறது. இந்தச் சரக்குகள் இந்த மாதங்களில் வங்காளத்துக்கும் பம்பாய்க்கும் அனுப்ப வேண்டியவையாகும்.”

“அடுத்து வரும் கல்கத்தா குதிரைப் பந்தயத்தை முன்னிட்டு சுமார் நூறு பந்தயக் குதிரைகள் கூடிய சீக்கிரம் ரயிலில் பங்களூரிலிருந்து அனுப்பப் படுமாம்.”

மேற்படி மூன்று செய்திகளையும் சேர்த்துப் பார்ப்பவர்களுக்கு சர்க்காரின் நிர்வாக ஊழல் பொதுவாகவே எப்படி வேரூன்றியிருக்கிறதென்பது தெரியவரும்.

‘அதிகப்படி பயிர் செய்!’ என்று ஒரு புறம் விவசாயிகளைச் சர்க்கார் தூண்டுகிறார்கள்.

அதே சமயம், பயிர் செய்த பொருள்களுக்கு ஏற்றுமதி வசதியளிக்காமல் விவசாயிகளைத் திண்டாட வைக்கிறார்கள்.

அதே சமயம், ரயில் வாகன்களில் பந்தயக் குதிரைகளை ஏற்றி அனுப்புகிறார்கள்.

பொறுப்பற்ற ஒரு அந்நிய ஆட்சியில் தவிர, வேறு எந்த ஆட்சியிலாவது இவ்வித பகிரங்க ஊழலை நாம் எதிர்பார்க்க முடியுமா?

இவ்வித நிர்வாகத்தின் பயனாக என்ன ஆகியிருக்கிறதென்றால், வங்காளத்தைப் பிடித்திருக்கும் கொடிய பஞ்சம், வங்காளத்தோடு நிற்குமா என்று இதர மாகாணங்களிலுள்ளவர்கள் கவலைப்படும்படியாயிருக்கிறது. அதுவும், அங்கு நடந்து வரும் சோக சம்பவங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் படிக்கும்போது தேசத்திலுள்ள சகலருமே திகிலடைய வேண்டியிருக்கிறது.

அங்கு இந்தப் பஞ்சம் ஏற்பட்டது முதல் ஒற்றுமையோடிருந்து வாழ்க்கை நடத்தி வந்த குடும்பங்களெல்லாம் அநேகமாகச் சிதைவுண்டு போய் விட்டன. நேற்றுவரை சகோதரர்களாயிருந்தவர்கள், இன்று ஒருவரையொருவர் சத்துருக்களாகக் கருதுகிறார்கள்.

வயோதிகர்களான பெற்றோர்களை ஆதரிக்க முடியாமல் புத்திரர்கள் அவர்களை வெளியே அனுப்புகிறார்கள். நடுத் தெருவிலும், சாலை ஓரங்களிலும் குழந்தைகளைக் கைவிட்டு விட்டுத் தாயார்கள் ஓடிப் போய் விடுகிறார்கள். கணவனை இழந்து, சகோதரர்களிடம் அடைக்கலம் புகுந்த ஸ்திரீகள் வீட்டை விட்டுத் துரத்தியடிக்கப்படுகிறார்கள்.

தன்னுடைய செல்வக் குழந்தைகளையெல்லாம் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை புரிந்து கொள்ளும் தாய்களின் பட்டினிக் கொடுமையைத்தான் என்னவென்று சொல்வது!

அன்று ஒரு நல்லதங்காள் பட்டினி வாய்ப்பட்டுத் தன்னுடைய செல்வக் குழந்தைகளோடு கிணற்றில் வீழ்ந்து உயிர் விட்டாளென்று சொல்வார்கள். இன்று வங்காளம் முழுவதும் நூற்றுக் கணக்கான தாயார்கள் நல்லதங்காளாக மடிந்து வருகின்றனர்!

இத்தகைய பஞ்சமும் பட்டினியும் தோன்றி இதுபோல் ஜனசமூகம் கூட்டம் கூட்டமாக உயிர் விடும் பயங்கர சம்பவம் வேறு எந்த தேசத்திலாவது நடந்திருக்குமா வென்பதே சந்தேகம். புல் பூண்டு கூட விளையாத இங்கிலாந்திலிருந்து ஒரு மனிதன் பட்டினியால் இறந்தான் என்ற செய்தி இதுவரை வந்ததுண்டா?

பிரிட்டிஷ் கப்பல்கள் உலகம் முழுவதும் சென்று உணவுப் பொருள் கொணர்ந்து பிரிட்டனிலுள்ளவர்களுக்கு வயிறார உணவு அளிக்காமல் போகவில்லை. செழிப்பு மிக்க இந்த தேசத்தில் மட்டில் இப்படிப் பஞ்சம் ஏற்பட வேண்டுமென்று இதன் தலையில் யார் எழுதினார்களோ, தெரியவில்லை!

வங்காளப் பஞ்சத்தைப் போக்குவதற்கு இதுவரை நூற்றுக் கணக்கான பேர் யோசனை கூறியிருக்கிறார்கள்.

இவர்களில் லண்டனிலிருந்து ஸர் அலெக்ஸாண்டர் ஹோரஸ் என்னும் அரசியல் அறிஞர், உருப்படியாக ஒரு யோசனை கூறியிருக்கிறார்.

அதாவது, புது வைஸராய் வேவல் பிரபு இந்தியாவுக்குப் போனதும், முதன் முதலில் செய்ய வேண்டிய காரியம், “மகாத்மா காந்தியிடம் சென்று, அவருடைய ஒத்துழைப்பைப் பெறுவதில் வெற்றி பெற வேண்டும். இந்தப் பஞ்ச நெருக்கடியை போக்குவதற்கு வழி காந்திஜிக்குத்தான் தெரியும்!” என்று கூறியிருக்கிறார்.

‘தாய் அறிவாள் பிள்ளை யருமை!’ என்ற வசனம் ஒன்று உண்டு.

அதன்படி பாரதப் புதல்வர்களின் அருமை பெருமையும், அவர்களுக்கு நேர்ந்திருக்கும் துன்பத்தைப் போக்கும் வழியும் காந்தி மகானுக்குத் தான் தெரியும். மாற்றாந்தாய் ஸ்தானத்திலிருந்து அதிகாரம் செலுத்துபவர்களுக்கு இது தெரிய நியாயமில்லை.

எனவே, தேசத்தில் எதிரி நுழைவதற்கு வாசற்படிபோலுள்ள வங்க மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் கொடுமையைப் போக்கி, அதன் மூலம் தேசம் முழுவதற்கும் நம்பிக்கை அளிக்க வேண்டுமானால் அதற்கு ஸர் வேவல் துரை இங்கு வந்த உடனே காந்திஜியிடம் தான் செல்ல வேண்டும்!

வாய்ச் சண்டை



[இதாலியில் இப்போது முஸோலினியும் படாக்ளியோவும் ஒருவரையொருவர் 'தேசத் துரோகி' என்று அழைத்துக் கொள்கிருர்கள்!]

தேர்தல் முடிவு

சமீபத்தில் இந்திய ராஜாங்க சபையில் காலியா யிருந்த ஸ்தானத்துக்கு நடந்த இடைத்தேர்தலில் ஸர் என். கோபாலஸ்வாமி ஐயங்கார் வெற்றி பெற்ருர். சாதாரணமாக ஒரு சின்ன நகர சபைத் தேர்தலென்ருல் கூட எவ்வளவோ ஆர்ப்பாடங்களையும் போட்டா போட்டிகளையும் பார்க்கிரும். அப்படி யிருக்க இந்தியாவில் அந்தஸ்தில் முதன்மையாகக் கருதப்படும் இராஜாங்க சபைத் தேர்தல் என்ருல் எவ்வளவு ஆர்ப்பாடமும் பரபரப்பும் இருந்திருக்க வேண்டும்! ஆனுல் மாஜி காஷ்மீர திவானே இப்படி யாதொரு தடபுடல்கள் ஜபர்தஸ்துகள் இல்லாமல் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

ஸர். என். கோபாலசாமி ஐயங்கார்

சில நாட்கள் முன்பு ஸ்ரீமான் கே. கோவிந்தசாரியார் காலஞ் சென்றதால் காலியான ஸ்தானத்துக்குத்தான் இந்த இடைத் தேர்தல் நடந்தது. ஸர் கோபாலஸ்வாமி அய்யங்காருக்கு எதிரியாக போட்டி யிட்டவர் ஸ்ரீ முத்தையா முதலியார் அவர்கள். இவர்களில் ஸர் கோபாலஸாமி அய்யங்காருக்கு 1154 வோட்டுகளும், ஸ்ரீ எஸ். முத்தையா முதலியாருக்கு 875 வோட்டுகளும் கிடைத்தன.

ஆகவே, ஸர் அய்யங்கார் அந்த ஸ்தானத்துக்கு உரியவர்தான் என்பது நிச்சயமாயிற்று. காஷ்மீரசமஸ்தானத்திற்குத் தொண்டு செய்து வந்து பெற்றிருக்கும் தமது அநுபவத்தை, அவர் தேசத்தின் நலனுக்குப் பயன் படுத்துவார் என்று எதிர் பார்க்கிருேம்.

தனக்கொரு நியாயம்......

இந்தியாவைக் கண்ட துண்டமாக பிளந்து விடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் காய்தே ஆஜம் ஜின்ஞு சமீபத்தில் ஒரு பெரிய அபாயத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பிப் பிழைத்தார். அதற்குப் பிறகு முதல் முதலாக அவர் மோமின் வர்த்தக சங்கத்தில் பேசி யிருக்கிருர்.

"தனித் தனியாக வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்துவதை நான் ஆதரிக்க வில்லை. வெற்றி ஏற்பட வேண்டுமென்ருல் ஒற்றுமைப்பட்ட முயற்சிதான் தேவை. ஆகவே, அகில-இந்திய முஸ்லிம் வர்த்தக சபை ஏற்படுத்துவதுல் தான் நன்மை பயக்கும்" என்று அதில் கூடசியாகக் கூறி யிருக்கிருர்.

தேசத்தைத் துண்டு துண்டாகப் பிரித்து விடவேண்டுமென்று தலைமையாக நிற்பவர்,—அதற்காக சுதந்

திரப் போராட்டத்திலிருந்து கூட விலகி நிற்கும் ஒருவர் — இப்படி ஒற்றுமைப்பட்ட முயற்சி, அகில-இந்திய ஸ்தாபனம் என்றெல்லாம் பேசியிருப்பது வேடிக்கை தான்!

ஒருவேளை "இன்னும் இரண்டு பேர் தன்னுடன் இருந்ததால் தானே நாம் உயிர் தப்பிப் பிழைத்தோம்? நான் மட்டும் தனியாக இருந்திருந்தால் என் கதி என்னவாயிருக்கும்?" என்று இப்பொழுது அவர் அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில் அதே மூச்சிலேயே "என்னுடைய லீகைக் கலைக்க எல்லோரும் முயலுகிறார்கள். அது முடியாது. பாகிஸ்தான் கொண்டு வந்தே தீருவேன்!" என்றும் கதறியிருக்கிறார். இதிலிருந்து அவர் ஒரு **அனுபவசாலி** அல்ல என்றுதான் நாம் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது

லட்சியமில்லை!

இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதும் ஒரு விதத்தில் நன்மையாக முடியுமோ என்று சிலர் சந்தேகிக்கலாம். ஏனெனில் உலகத்தின் எல்லா பாகங்களையும் இந்த விஷயம் கவர்ந்துவிட்டது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் உள்ள பத்திரிகைகளும் பிரமுகர்களும் இதைப் பற்றியே தலையங்கங்களும் கட்டுரைகளும் பிரசங்கங்களும் பொழிந்து தள்ளுகிறார்கள். இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களைப் பார்த்தால் உண்மையாகவே "இந்தியாவைப் பற்றி அவர்களுக்கெல்லாம் சிரத்தை ஏற்பட்டு விட்டதோ?" என்று கூடத் தோன்றுகிறது. இந்தியாவை நிர்வகிப்பவர்களிடம் அவர்கள் காண்பிக்கும் கோபமும் அதிருப்தியும், கஷ்டப்படும் இந்தியர்களிடம் காண்பிக்கும் அனுதாபமும் அவ்வளவு ஆவேசம் நிறைந்ததாயிருக்கின்றன!

ஒருவர், "இந்தியாவுக்கு உணவு அனுப்புவதைவிட வேறென்ன வேலை?" என்று கோபிக்கிறார்.

"நம்மிடமுள்ள கப்பல் வசதிகளை முதலில் இந்த உணவு பஞ்சத்தை நீக்க உபயோகியுங்கள். பாக்கி யெல்லாம் அப்புறம்" என்று கர்ஜிக்கிறார் மற்றொருவர்.

"உலகத்தில் எங்கேயிருந்தாலும் சரி, அந்த உணவு பொருள்களை இந்தியாவில் கொண்டு சேர்த்துத்தானாக வேண்டும்" என்று வேறொருவர் கூறுகிறார்.

"அமெரியின் நிர்வாக லட்சணம் இது தானா?" என்று கேலி செய்பவர் சிலர்.

"உடனே இந்தியாவில் தேசீய சர்க்கார் ஏற்படுத்துங்கள்! அது தான் இதற்கு வழி" என்று யோசனை கூறுபவர் வேறு சிலர்.

பேச்சனுதாபம் கூட இந்தியா விஷயத்தில் இது வரை இவ்வளவு தூரம் வெளி நாட்டார் காட்டியது கிடையாது.

மேலும், கோயபல்ஸ் துரை முதலியவர்கள் இதுதான் தகுந்த சமயமென்று தங்கள் பிரசாரத்தை மும்முரமாகத் துவக்கி விட்டனர். "நாங்கள் ஆக்ரமித்துள்ள நாடுகளில் கூட இப்படி இல்லையே!" என்று ஜம்பமடித்துக் கொள்கின்றனராம். இது பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூட ஒருவர் தம்முடைய பீதியை தெரிவித்தாராம்.

ஆனால் பெரியார் அமெரிக்கு மட்டும் இதை யெல்லாம் பற்றி அக்கரையில்லை. யஜமான் சர்ச்சில் இருக்கும் வரை அவருடைய பதவி கெட்டியாகத்தானிருக்கும். அந்த சர்ச்சிலையோ யாரும் இப்பொழுது அசைக்க முடியாது. ஏன் என்று அவரைக் கேட்கக்கூட யாருக்கும் துணிச்சல் இந்த சமயத்தில் இருக்காது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். பின் ஊரார் என்ன சொன்னால்தான் அவருக்கென்ன?

துக்கடா

● "பண்டித மாளவ்யாஜியின் பிரசங்கம் கேட்பதற்கு இனிமையாக இருக்கும்."

— **ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார்.**

மாளவ்யாஜியின் குரல் இனிமையைப் பற்றித்தான் ஸர் செட்டியார் சொன்னாரே தவிர, அவருடைய பேச்சைப் பற்றி யல்ல. அது அவருக்குக் கசப்பாகத்தான் இருந்திருக்கும்!

● "புகையிலையை உபயோகிப்பதானது ஞாபக மறதியை உண்டு பண்ணும் என்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது."

— **வார சஞ்சிகை.**

தப்பு! அது தன்னை அடிக்கடி உபயோகப்படுத்தும்படி ஞாபக மூட்டிக் கொண்டல்லவா இருக்கிறது?

● "சமீபத்தில் நான் ஒரு புத்தகத்தைப் பார்வையிட நேர்ந்தது. ஆனால் அதில் பிரமாதமாக ஒன்றுமே யிருக்கவில்லை."

— **ஒரு ஆசிரியர்.**

அது அவருடைய சொந்த பாங்கி 'செக்' புஸ்தகமோ என்னமோ?

● "... பரத நாட்டியக் கச்சேரியைப் பார்த்துக் கொண்டிருந்த போது சபையோர்கள் சிலர் கூட நாற்காலியில் எழும்பி அபிநயங்கள் பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள்."

— **ஒரு விமர்சனம்.**

இதற்குக் காரணம் நாற்காலிகளில் குடியிருந்த மூட்டைப் பூச்சிகளாயிருக்குமோ என்று ஒரு வாசகர் சந்தேகிக்கிறார்.

● "உணவு சரியாகச் செல்லவில்லை யென்றால் உடனேயே டாக்டரிடம் செல்லுவது நலம்."

— **சுகாதாரக் கட்டுரை**

வீட்டில் ஒரு நல்ல பரிசாரகனை வைத்து விடுவதும் ஒரு யோசனை.

● "ஹிட்லருக்கு என்ன வேண்டும் என்பது நன்றாகத் தெரியும்."

— **கோயபெல்ஸ்.**

அவருக்கு என்ன கிடைக்கும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

● "... ஊரில் ஒரு பாடகருக்குக் காதில் வலி ஏற்பட்டிருக்கிறது. அதனால் இரண்டு மாதங்களுக்கு அவர் பாட மாட்டார் என்று தெரிகிறது."

பல அபிமானிகள் இரண்டு மாதம் காது வலி நீங்கியிருக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

● "ஆப்பிரிக்கக் காடுகளில் வசிக்கும் ஒரு வகை ஜாதியினருக்குப் பல்லே கிடையாது!"

இவர்கள் ஒரு சிறு கும்பல் தான் என்று ஊகிக்கிறோம்.

● "சில உலோகங்கள் வியாதிகளை நீக்க உபயோகமாயிருக்கின்றன."

உதாரணமாக, தங்கம், வெள்ளி முதலியவை பல ஸ்திரீகளின் மனோ வியாதியை நீக்குவதைப் பார்க்கிறோமே!

● "ஒரு கச்சேரி நடந்துகொண்டிருந்தபோது பூகம்பம் ஏற்படவே, கொட்டகை இடிந்து விழுந்து விட்டது."

— **ஜப்பான் செய்தி.**

கச்சேரி செய்தவர் மட்டும் சபையில் எழுந்த கரகோஷத்தில்தான் கொட்டகை இடிந்ததாக எண்ணிக் கொண்டிருக்கலாம்!

● "ஆப்பிரிக்காவிலுள்ள ஆண் சிங்கத்துக்கு வேறு எந்த மிருகத்தினிடமும் பயம் இல்லை."

அதன் ராணியாகிய பெண் சிங்கம் நீங்கலாக என்று சேர்த்துக் கொள்ளலாமா?

● "மோட்டாரை சரியாக விடத் தெரியாமல் தெருவில் ஓட்டுகிறவர்களை நொறுக்க வேண்டும்!" என்கிறார் ஒரு மாஜிஸ்ட்ரேட்.

அவசியமில்லை! அவர்களே தான் நொறுக்கிக் கொள்கிறார்கள்!

சுகந்த பாக்குத்தூள்

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி, கோயமுத்தூர்.

மதராஸ் விற்பனையாளர்கள்:

வி. கனகய்ய செட்டி & கம்பெனி,

நைனியப்ப நாயக்கன் தெரு.



தலையில்

தலை மயிர் தெரிகிறதா, அல்லது அடித் தலை தெரிகிறதா? அடித்தலையே புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேச ராசிகளுக்குப் பதில் புதுக் கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் **கேசவர்த்தினி**யைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத் தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்து விடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச் சமயங்களில் **கேசவர்த்தினி**யை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி, இளம் கூந்தலையும் இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி" "தென் இந்திய ரஸாயன சாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12. (மேற் செலவு வேறு)

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்



[நமது யுத்த நிருபர்]

மேலும் முன்னேற்றம்

பிரிட்டிஷ் எட்டாவது சைன்யமும், அமெரிக்க ஐந்தாவது சைன்யமும் மெள்ள மெள்ள இத்தாலியில் முன்னேறி வருகின்றன. நேபிள்ஸ் நகரம் வீழ்ச்சியுற்றது நேச நாடுகளுக்கு ஒரு பெரிய லாபம் என்பதை யாரும் மறுத்துக் கூற முடியாது. அந் நகரம் அச்சுத் துருப்புகளை கைவிட்டுச் சென்ற பின், அவை வால்டுர்னோ நதிக்கரையை நோக்கி பின் வாங்கி வருகின்றன.

பாக்கியாவைக் கைப்பற்றிய எட்டாவது சைன்யம் இப்போது மேலும் முப்பது மைல்கள் முன்னேறியிருக்கிறது. அட்ரியாடிக் கடற் கரையில் சரி பாதி தூரம் நேச சைன்யங்கள் வந்து விட்டன. தினம் ஒன்றிரண்டு பெரிய நகரங்களாவது திரும்பிக் கொண்டிருக்கின்றன. ரோம் நகரத்தை நோக்கி இன்னும் விரைவாகச் செல்வதற்கு நேச சைன்யங்கள் இதாலியின் கீழ் கரையில் இறங்கியிருப்பதாகவும் ஒரு செய்தி வருகிறது. ஹிட்லரின் சேனைகளை ஐந்தாவது சேனையும் எட்டாவது சேனையும் கிடுக்கி போல் பிடிக்க முயன்று வருகின்றன. நிலைமை மோசமாகி வருவதை ஊகித்து ஜெர்மன் ஜெனரல் சுமார் 62,000 நாஜி துருப்புகளுக்கு ஒரு கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கிறார். "பிடியை விடாதே! தவறினால் உயிரை வைத்துக் கொண்டிராதே!" என்பதுதான் அந்த உத்தரவின் சாராம்சம்.

இதாலியில் பெரிய ரயில்வே ஜங்ஷனான டெர்மோலியை நேசத் துருப்புகள் கைப்பற்றின. இதனால் அச்சுத் துருப்புகள் பல்லுடைந்தது போல் இருக்கிறதாம். அதைத் திரும்பப் பிடித்துக் கொள்ள அவை செய்த முயற்சிகளில் ஒன்றாவது பலன் தரவில்லை.

பெனிவெண்டோ, பிரிஜெண்டோ, போமிக்ளியானோ, காபோடிசினோ, ஸான் பார்த்தலோமியோ முதலிய நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேசப் படைகளிடம் சரண் அடைந்து விட்டன. வட பாகத்திலிருந்த யுத்தக் கைதிகள் கூடச் சண்டை போட்டுக் கொண்டு நேசப் படைகளை வந்து சேர முயன்று வருகிறதாகத் தெரிகிறது. வடக்கே ஜெனரல் ரோமெல் பாதுகாப்பு அரண் ஒன்று நிர்மாணித்து வருகிறார் என்றும் சொல்லப்படுகிறது. அடுத்தபடியாக எதிரிகள் எங்கே நின்று சண்டை போடுவார்கள் என்று என்று நேச நாடுகளுக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஏன், நாஜிகளுக்கே கூட அது இன்னும் சந்தேகமாகத்தான் இருக்கிறது போல் தோன்றுகிறது!

ஆர். ஏ. எப். விமானங்கள் இதாலிய நகரங்களை ஜமாய்த்துக் கொண்டு வருகின்றன. டிரீஸ்டி, பொலோக்னா முதலியவைகளில் பலத்த குண்டு வீச்சு இருந்தது.

யுகோஸ்லேவியாவில் குழப்பங்கள் ஓய்ந்தபாடில்லை. நேசக் கப்பல்கள் இங்கே டால்மேஷியாவின் கரையில் கொரில்லாப் படை

களுக்கு வேண்டிய தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும் இறக்கியதாக பெர்லின் செய்தி ஒன்று கூறுகிறது. யுகோவிலுள்ள கொரில்லாப் படைகள், ஒரு இதாலியத் தீவைக் கைப் பற்றி விட்டன வென்றும் தெரிகிறது.

கார்ஸிகாவில் பாஸ்டியா என்ற துறைமுகம் பிரெஞ்சுத் துருப்புகள் வசம் சிக்கிய வுடனேயே, இந்தத்தீவுசீக்கிரம் சரண் அடைய வேண்டியதுதான் என்று தீர்மானித்திருக்கலாம். இப்போது இந்தத் தீவில் எதிரியின் நடவடிக்கைகள் முற்றுப் பெற்று விட்டன வென்று ராணுவ அறிக்கை வெளியாகி யிருக்கிறது. கார்ஸிகாவில் நேசத் துருப்புகள் இறங்க ஆரம்பித்து 20 நாட்களேதான் ஆகின்றன.

கிழக்கு இதாலியில் நேசப் படைகள் கவனம் செலுத்துவதைப் பார்க்கும் போது, பால்கன் நாடுகள் மீது படையெடுப்புச் செய்யும் நோக்கம் அவற்றிற்கு இருக்குமோ வென்று சந்தேகிக்கும்படி இருக்கிறது.

டோடிகானிஸ் தீவுகளில் ஒன்றான காஸ் என்பதை நேசப்படைகள் சிறிது காலத்துக்கு முன்பு வசப்படுத்திக் கொண்டன. அந்தத் தீவில் மீண்டும் அச்சுத் துருப்புகள் இறங்கி யிருக்கின்றன. இவைகளைத் தடுக்க நேசத் துருப்புகளும், ஆர். ஏ. எப். விமானங்களும் பெரு முயற்சி செய்து பார்க்கின்றன. ஜெர்மன் படைகள் லீராஸ், ஸீமாஸ் என்ற இரு தீவுகளிலும் கூட இறங்குவதாக பெர்லின் செய்தி ஒன்று கூறுகிறது. ஜெர்மனி இந்தத் தீவுகளில் கவனம் செலுத்துவதற்குக் காரணம், அது இவைகளையும் ருஷ்ய முனையின் ஒரு பகுதியாகக் கருதுவதாக இருக்கலாம்.

ருஷ்யாவில் விடா ஓட்டம்

'ஓயிட்' ருஷ்யாவில் ஜெர்மன் சைன்யங்கள் இன்னும் நின்று திரும்பிப்பார்க்கவில்லை. கோமெல் – மொகிலெவ் — விடிப்ஸ்க் ரயில் வேயை இலக்காக வைத்துக் கொண்டு ருஷ்யப் படைகள் முன் செல்கின்றன. வர வர நாஸிகளுடைய எதிர்ப்பு பலமாகி வருகிறதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் மேலும் படைகளைக் கொண்டு நாஸிகள் குவிக்கிறார்களாம். கோமெலுக்கு அருகில் பெரிய டாங்கிப் போர்கள் நடந்தனவாம். போலந்து எல்லைப்புறத்தை அடைய ருஷ்ய சைன்யங்களுக்கு இன்னும் அறுபது மைல்கள் தானிருக்கின்றன.

ருஷ்யர்கள் இப்போது வெற்றிகள் பெற அவசரப்படுவதற்கு முக்கிய காரணம், மழை தான். மழை காலம் வெகு சமீபத்தில் இருக்கிறது; இப்போதே சில இடங்களில் மழை பொழியவும் தொடங்கி விட்டதாம். மழை பலக்குமானால், துருப்புகள் போக்கு வரவு சாத்திய மில்லாமல் போய், தாற்காலிகமாக முன்னேற்ற வேகம் தடைப்படும். அதற்குள்ளாக முடிந்த வரையில் வெற்றிகளைப் பெறுவதற்குத்தான் பார்க்கிறார்கள் ருஷ்யர்கள். இப்போது விடிப்ஸ்கை அடைய 27 மைல் தான் பாக்கியிருக்கிறது.

மாரிக்காலத்திற்குப் பின் வரும் பனிக்காலம்தான் எப்போதுமே ருஷ்யர்களுக்கு உதவி செய்வதாயிற்றே! அப்போது அவர்கள் தங்கள் பழைய எல்லைக்கே கூடப் போய்ச் சேர்ந்து விடலாம்.

காகஸஸில், க்யூபன் அரங்கத்திலும் போர்களுக்குக் குறைவில்லை. ஜெர்மானியர் இப்போது ருஷ்யர்களுக்கு டாமன் தீபகற்பத்தை ஒழித்துக் கொடுத்து விட்டதாகத் தெரிகிறது.

மத்திய அரங்கத்தில், ஸ்மாலென்ஸ்கி லிருந்து கிழக்குநோக்கி முன்னேறுகிறது ருஷ்ய சேனை. மின்ஸ்க் இருப்புப் பாதைகள் தகர்க்கப்பட்டு விட்டனவாம்.

ஜெர்மன் பிரசாரம்

பொய்ப் பிரசாரத்தில் பெயர் போன கொயபெல்ஸ் மிக சிரமப்பட்டு நேச வெற்றிகளுக்கும், ருஷ்யாவில் ஜெர்மானியரின் ஓட்டத்துக்கும் காரணம் கண்டு பிடித்துச் சொல்லி யிருக்கிறார். தவிர, மற்றொரு விதமான பிரசாரத்திலும் ஜெர்மனி இறங்கி யிருக்கிறது. அதன் மூலம் அமெரிக்க — பிரிட்டிஷ்காரர்களுக்கும், ருஷ்யர்களுக்கு மிடையே பிளவு உண்டு பண்ணிவிடலாம் என்று கனவு காண்கிறது. ஒரு வதந்தி, ருஷ்ய சைன்யங்கள் பழைய (1939) எல்லைப் புறத்தை அடைந்

முத்தண்ணாவும் அவர் நண்பர்களும்





தவுடன் ஜெர்மனியுடன் தனிப் பட சமாதானம் செய்து கொள்ளும் என்பது. கூடிய சீக்கிரத்தில் மாஸ்கோவில் நடக்க விருக்கும் மூன்று நேச நாடுகளின் சம்மேளனத்துக்கு முந்தி ஏதாவது விஷமம் செய்து பார்க்கலாமென்பதே ஜெர்மனியின் நோக்கம்.

நியூ கினியில் முன்னேற்றம்

ஆஸ்திரேலியப் படைகளும் அமெரிக்கத் துருப்புகளும் நியூ கினியில் முன்னேறிக் கொண்டு வருகின்றன. அதன் பலனாக பின்ஸ்சேபன் என்னும் முக்யமான இடம் வசமாகி யிருக்கிறது. அதோடு, ஹுவான் தீபகற்பமே அவர்கள் கைக்கு வந்து விட்டதாகிறது.

அம்பாய்னுவில் நேச விமானங்கள் குண்டு வீச்சுச் செய்திருக்கின்றன.

அடுத்த முக்யமான இலக்கு மடாங். இதற்கு 60 மைல் வடக்கில் இருக்கும் ஒரு கிராமம் கடைசியாக நேச வசமாகி யிருக்கிறது.

இதர செய்திகள்

ஜப்பான் தென் பஸிபிக் அரங்கத்தில் கொலம்பங்கராவைக் காலி செய்து விடுமென்று தெரிகிறது. பொதுவாகத் தென்மேற்கு பஸிபிக் அரங்கத்திலேயே ஜப்பான் சளைத்துத்தான் வருகிறது.

சீனாவில் ஜப்பான் புதுத் தாக்குதல்களைத் தொடங்கி யிருக்கிறது. தவிர, இங்கே இதற்கு விமான பலம் ஓரளவு அதிகரித்திருக்கிறதென்றும் கூறுகிறார்கள்.

வழக்கம் போல் பர்மாவில் குண்டு வீச்சுக்கள் இருந்தன. அப்போது அக்யாப்புக்கும் நேச விமானங்கள் போய் வந்தன.

இந்து மகா சமுத்திரத்தில் அலைந்த யூ-போட்டுகள் வதம் செய்யப்பட்டிருக்கின்றன. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் பெரிய நேசக்கப்பல் கோஷ்டி ஒன்றை யூ-போட்கள் சில தாக்கவே, ஒரு பெரும் போர் நடந்திருக்கிறது. கடைசியில் யூ-போட்கள் வாலைத் திருப்பிக் கொண்டு ஓடினவாம்.

ஜெர்மனியில் பிரதான நகரங்களான காஸ்ஸெல், பிராங்க்பர்ட், முனீச் எங்கும் நேச விமானங்கள் தாக்கி வந்தன. சில எதிரி விமானங்கள் பிரிட்டனுக்கும் வந்து போயினவாம்.

ஜெர்மன் துருப்புகளை நார்வேயிலிருந்து ஹிட்லர் திரும்ப அழைப்பதாக ஒரு வதந்தி பலமாக இருக்கிறது. இதை பெர்லின் மட்டும் மறுக்கிறது. இப்போது ஹிம்லர் டென்மார்க்குக்கு வந்திருக்கிறார்.

அமெரிக்காவின் புதிய ருஷ்ய தூதராக கிராமிகோ என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரை ரூஸ்வெல்ட் பரம திருப்தியுடன் வரவேற்றிருக்கிறார்.

சௌந்தரம்மாள்

14

எஸ். வி. வி.

எங்க சித்தி ஒரு தினுசான மனுஷி. யாரோடும் அதிகமாகக் கலகலவென்று பேசிக் கொண்டிருக்க மாட்டாள். தன் வேலை உண்டு, தான் உண்டு.

இரண்டாம் கட்டுத் தாழ்வாரத்தில் அகலமான திண்ணை ஒன்றிருக்கிறது. சிகப்புச் சாந்து பூசி மழ மழ வென்றிருக்கும். ஒரு ஓரத்தில் தலை வைத்துப் படுக்க நிகளமாய்ச் சும்மாடும் கட்டி விட்டிருக்கும். வேலை செய்கிற சமயம் போக மற்ற நேரங்களில் கையில் ஒரு விசிறியை வைத்துக் கொண்டு அந்தத் திண்ணையின் மேலேயே உட்கார்ந் திருப்பாள். மழை பேயட்டும் வெய்யில் காயட்டும், விசிறியை விட மாட்டாள். அந்தத் திண்ணைப் பக்கத்திலேயே சுவரில் ஒரு ஆணி அடித்திருக்கும். வேலையாய் எழுந்து போகும்போது விசிறியை அந்த ஆணியில் மாட்டி விடுவாள். மறுபடி வந்து உட்காரும் போது விசிறியைக் கையிலெடுத்துக் கொண்டு விடுவாள்.

எங்க சித்தி ரொம்ப அழகாயிருப்பாள் என்று முன்னேயே சொல்லி யிருக்கிறேனே. வீட்டிலிருக்கும் போது கூட இரண்டு பட்டைச் சரிகைப் போட்ட எழுபது எண்பது ரூபாய்ப் புடவைக்குக் குறைந்து கட்டிக் கொள்ள மாட்டாள். ஒட்டியாணம் நாகவொத்து எல்லா நகைகளையும் தினம் போட்டுக் கொண்டு விடுவாள். இவ்வளவு அழகுகளையும் செய்து கொண்டு அந்தத் திண்ணையை விட்டு அந்தண்டை இந்தண்டை நகர மாட்டாள். கொஞ்ச நேரம் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். கொஞ்ச நேரம் மேலேயே ஒரு காலை குந்திட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். படுக்கிறது என்றாலும் அங்கேயே தான் படுத்திருப்பாள். அந்தத் திண்ணைக்கு 'சித்தி திண்ணை' என்றே எங்காத்தில் பேர். ஒரு கோவிலுக்குப் போக வேண்டும் குளத்துக்குப் போக வேண்டும், அதைப் பார்க்க வேண்டும், இதைப் பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசையும் அவளுக்குக் கிடையாது. அண்டை வீடு அயல் வீடு என்னமா யிருக்கும் என்றே அவளுக்குத் தெரியாது.

காலை ஆறு மணிக்கு எழுந்து மறு நாள் காலை ஆறு மணி வரைக்கும் அந்தத் திண்ணையை விட்டு நகராமல் அங்கேயே ஒரு மனுஷி தனக்குத் தானே துணையாகத் தனியாய் எப்படி உட்கார்ந்திருக்க முடியும் என்று நமக்கு ஆச்சர்யமாய்த் தோன்றும். அவளுக்கு அது ரொம்ப ஸகஜம்.

இப்படிச் சொன்னதிலிருந்து அவள் சோம்பேறி என்றாவது சிடுமூஞ்சி என்றாவது நினைத்து விட வேண்டாம். அம்மாதிரி ஒன்று மில்லை. நாம் போய் அவளிடத்தில் பேசினால் எத்தனை நாழியானாலும் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருப்பாள். அவளையே நாம் பரிகாசம் செய்யலாம்: அப்பொழுதும் சிரிப்பே தவிர முகத்தில் ஒரு விகாரம் ஏற்படாது.

"என் சித்தி? இப்படித் திண்ணையாச்சு, நீங்களாச்சு என்று எப்போ பார்த்தாலும் உட்கார்ந்திருக்கிறீர்களே, உங்களுக்கு அலுப்பு தட்டுகிறதில்லையோ?" என்று நான் கேட்பேன்.

"உட்கார்ந்திரா விட்டால் என்ன பண்ணணும் என்கிறாய்? இப்படியே உட்கார்ந்திருந்தால் போது தானே போய் விடுகிறது" என்று பதில் சொல்லுவாள். விசிறி கையில் இல்லாமல் ஒரு நாள் உட்கார்ந்திருந்தாளானால், "என்ன அநியாயம் சித்தி? விசிறி கையில் இல்லாமல் இப்படி உட்கார்ந்திருக்கலாமா?", என்று பரிகாசம் பண்ணுவேன்.

"உள்ளே எடுத்துக் கொண்டு போனேன், மறந்து போய் அங்கேயே வைத்து விட்டு வந்து விட்டேன்டி. போய் எடுத்துக் கொண்டு வர வேண்டும்" என்று சொல்லிச் சிரிப்பாள்.

ஏதைச் சொல்லட்டும், என்னதான் அவளைப் பரிகாசம் செய்யட்டும், சிரித்த முகமாயிருப்பாளே தவிர கோபம் என்பது அவள் முகத்தில் தென்படவே தென்படாது.

வேலை செய்கிறதிலும் அப்படியே தான். ஒருத்தர் கையை எதிர்பார்க்க மாட்டாள். நாம் செய்தால் சரி; இல்லா விட்டால் அவளே செய்து கொண்டு போவாள். நம்ம பேரிலும் ஒரு வெறுப்பைக் காண்பிக்க மாட்டாள். அடுப்பில் சாதம் கொதித்துக் கொண்டிருக்கும். கொதித்து வடிக்கிறதற்கு இன்னும் கொஞ்சம் நாழியாகுமே, அதற்குள் மாடிக்குப் போய் வரலாம் என்று போவேன். அங்கே எங்காத்துக்காரர் பேசுவதற்குப் பிடித்துக் கொண்டு விடுவார். "அய்யோ! சாதம் கூழாய்ப் போய் விட்டிருக்குமே!" என்று பயந்து கொண்டு அவசர அவசரமாய் ஓடி வருவேன். விசிறியைக் கையில் வைத்துக் கொண்டு திண்ணையின் மேல் எங்க சித்தி உட்கார்ந்திருப்பாள்.

"சாதத்தை வடித்து விட்டு, குழம்புக்கு உப்பு, புளி எல்லாம் போட்டு அடுப்பில் வைத்திருக்கிறேன். கொதித்ததும் மாக் கரைத்துக் கொட்டி இறக்க வேண்டியதுதான். போய் இறக்கி விடு" என்பாள். நம்ம மனது தான் குற்றமுள்ள நெஞ்சு அடித்துக் கொள்ளுமே தவிர அவள் முகத்தில் ஒரு அருவருப்பு தென்படாது.

வேலைக்குச் சோம்பல் படவே மாட்டாள். எதையும் ரொம்ப நிதானமாகத்தான் செய்வாள். நடக்கிறது, பேசுகிறது எல்லாமே ரொம்ப நிதானம். உடம்பில் ஒரு பரபரப்பு தென்படாது. ஆனால் வேலையை யெல்லாம் ஒரு நொடியில் செய்து விட்டு வெளியே வந்து விடுவாள்.

சாயந்திரம் கொஞ்சம் காப்பி போட்டுச் சாப்பிட வேண்டும் என்று அவளுக்கிருந்தால் நம்மைக் கூப்பிட்டு "காப்பி போடடி" என்று சொல்ல மாட்டாள். விசிறியை ஆணியில் மாட்டி விட்டு, திண்ணையை விட்டுச் சாவதானமாய் இறங்கி உள்ளே போய்க் கரியடுப்பை மூட்டி, நிதானமாய்க் காப்பியைப் போட்டு, சாப்பிட்டு விட்டுப் பாத்திரங்களை யெல்லாம் அலம்பி வைத்து விட்டு, மறுபடி திண்ணையில் வந்து உட்கார்ந்து விடுவாள்.



"என்ன இப்படி அழும்பு பண்ணுகிறீர்கள், சித்தி! என்னைக் கூப்பிட்டுக் காப்பி போடு என்று சொல்லக் கூடாதா? நான் போட மாட்டேனோ? நீங்களே போய் ஏன் போட்டுக் கொள்ள வேண்டும்?" என்று கேட்பேன்.

"நான் என்ன, இங்கே பண்ணிக் கொண்டிருக்கிறது தாசில் வேலையோ?" என்று பதில் சொல்லுவாள்.

எங்க சித்தியைப் போல் நல்ல மனுஷி இந்த ஜகத்திலேயே கிடையாது. எந்த சமயத்திலாவது எதற்காகவாவது கொஞ்சம் கடிந்து பேசுவாள் என்று உண்டோ? பேசக்கூடாது.

கௌஸல்யா என்ற இந்தப் பெண் ஒருத்தி இல்லாமல் ஆத்தில் நானும் எங்க சித்தியும் மாத்திரம் இருக்கிறது என்றால் வீடு என்ன சந்தோஷமாயிருக்கும்! குடியைக் கெடுக்கிறதற்கு இந்தப் பெண் ஒன்று வந்து சேர்ந்தது!

நீசல் என்றாலும் அந்தப் பெண் அவ்வளவு நீசல் இன்னொருத்தி இருக்க மாட்டாள். இந்தப் பெண்ணைப் பார்த்தால் வேதத்தையே கோயிலில் வைத்துக் கும்பிடலாம். திருவல்லிக்

கேணியில் அந்தப் பெண் போகாத இடம் கிடையாது; போகாத வீடு கிடையாது.

பத்து வயதாய் இருக்கும்போது அந்தப் பெண் திருவல்லிக்கேணியில் இந்தாத்தில் வந்து 'படிக்கிறேன் பேர் வழியே' என்று இரண்டு வருஷம் குப்பை கொட்டினாள். அப்போ திருவல்லிக்கேணியில் எல்லோரையும் அவளுக்குத் தெரியும். தெரிந்தால் தான் என்ன? இப்போ வயதாச்சுது; குதிரையாட்டமா வளர்ந்திருக்கிறாள்; இன்னும் கலியாணமாகவில்லை; வெளியில் போகிறது என்றால் ஒரு பெண்ணுக்கு லஜ்ஜையாய் இராது? அந்தப் பெண்ணுக்கு அதெல்லாம் ஒன்றுமில்லை. டமாரக் காளை மாதிரி ஊர் பூராவும் திரியும். 'அந்தப் பெண் வீட்டுக்குப் போய் வருகிறேன். இந்தப் பெண் வீட்டுக்குப் போய் வருகிறேன்' என்று வெளிக் கிளம்பி விடும். ஆத்தில் பெரியவளாய் இருக்கிற அக்காக்காரி இதையெல்லாம் கண்டிக்க வேண்டுமோ இல்லையோ? வாயைத் திறக்க மாட்டாள். ஊர் சுற்றி விட்டுப் பதினொரு மணிக்கு வீடு வந்து சேர்ந்துதானால். "மணி பதினொன்றாச்சுது! இன்னும் என்னடி குளித்து விட்டுச் சாப்பிடவில்லை.? போ, சட்டென்று குளித்து விட்டு சாப்பிடு!" என்பாள் எங்க சித்தி. இதுவா அந்தப் பெண்ணைக் கண்டிக்கிறது என்று பேர்!

இதெல்லாம் எப்படியாவது தொலைந்து போகட்டும்: எங்காத்துக்காரரிடத்தில் இந்தப் பெண்ணுக்கு கரிப்பு என்ன? விளையாட்டு என்ன? —என்று கேட்கிறேன். எப்பொழுதோ அவரும் இவளும் சின்ன வயசா யிருக்கும்போது ஒரு விட்டிலிருந்து இரண்டு பேரும் விளையாடிக் கொண்டிருந்தால் இப்பொழுதும் அப்படி விளையாடிக் கொண்டிருக்கலாமா? இவள் என்ன ஒட்டுக் குழந்தையா? பாப்பாவா? அவர்தான் சிறு குழந்தையா? ஒரு பெண்ணுக்கு வயது வந்தால் லஜ்ஜை என்பது தானே கூட வராது?

எங்காத்துக்காரர் ரூமில் தனியாய் உட்கார்ந்து கொண்டிருந்தால் இந்தப் பெண் அங்கே போகிறது; டிராயரைத் திறக்கிறது; மேஜையத் திறக்கிறது; இது என்னடா என்கிறது; அது என்னடா என்கிறது; அவரோடு இளிச்சிண்டு பேசிக்கொண்டிருக்கிறது; இதெல்லாம் என்ன ஒழுங்கு? அந்தப் பெண் அந்த மாதிரியெல்லாம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

எங்காத்துக்காரரும் கீழே இறங்கி வந்தாரானால் "என்னடி. திருவல்லிக்கேணி ந்யூஸ் பேபர்!

தீபாவளி ஜவுளிகள்!

- பட்டுச் சேலைகளில் பல புதிய ரகங்கள்.
- பாவாடை, ரவிக்கைத் துண்டுகளில் எண்ணற்ற மோஸ்தர்கள்.

ராதா ஸில்க் எம்போரியம்

போன்: 8016

ஹெட் ஆபீஸ்: மைலாப்பூர் — மதராஸ்.

பிராஞ்ச்: பெரிய தெரு — கும்பகோணம்.

இன்றைக்கு என்னென்ன விசேஷங்கள்?" என்று அந்தப் பெண் வாயைக் கிளறுவார்.

எனக்கா, இதையெல்லாம் பார்த்து உள்ளுக்குள் ஆத்திரம் பொங்கும். எங்க சித்தியும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறாளே! கண்டிக்க மாட்டாள் ஒருத்தி? அவளுக்கும் அது என்ன எருமைக் கடாத்தனம்? எங்க மாமனாரிடத்தில் வேதம் அசட்டுத் தனமாய் நடந்து கொண்டாள் என்று மாய்ந்து போய் விட்டாளே எங்க சித்தி! மற்றவர்களுக்கும் அப்படித் தானே இருக்கும்? அவாளவாளுக்கு வந்தால்தானே தெரியும் குளிரும் தலை வலியும்!

எங்காத்துக்காரர்கிட்டச் சொல்லலாமென்றால், அவரிடத்தில் என்னவென்று சொல்லுகிறது? இது ஒருத்தரோடொருத்தர் சொல்லிக் கொள்ளுகிற விஷயமா? "இவ்வளவு சந்தேகப் பிராணியா?" என்று நம்மைத்தானே தப்பாய் நினைத்து விடுவர்?

இம்மாதிரி எண்ண மிட்டுக் கொண்டு என் மனது இவ்வளவு அவ்வளவு துன்புற்றது என்று இல்லை. என் வாழ்க்கையே பாழாய்ப் போய் விட்ட மாதிரி எனக்குத் துக்கம் தலை கொண்டு விட்டது. அந்தப் பெண்ணைக் கண்டால் எனக்குப் பேசப் பிடிக்கவில்லை. அதன் மூஞ்சியைப் பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. அவள் மென்னியை முறித்துப் போட்டு விடலாமா என்று வரும் கோபம். அந்தப் பெண்ணோ பரம சாது மாதிரி என்னிடத்தில் குலாவ வரும். சண்டை போட்டுக் கொண்டவள் மாதிரி அவளிடத்தில் நடந்து கொள்ள முடியுமா? அதுவும் எங்க சித்திக்குச் சொந்த தங்கையிடத்தில்!

என் மனதுக்குப் பொறுக்க முடியாத கஷ்டம் ஏற்பட்டு விட்டது. வேலை செய்து கொண்டிருக்கும்போதும் 'இந்தப் பெண் எங்கிருக்கிறது? என்ன பண்ணிக் கொண்டிருக்கிறது? மெத்தைக்குப் போய் விட்டதா என்ன?' என்று கவனித்து வருவதிலேயே என மனம் பூராவும் சென்றிருக்கிறது. இந்தப் பெண் மெத்தைக்குப் போயிருக்கிறது என்று தெரிந்தால் மனது கேட்காமல் நானும் பின்னாடியே மெத்தைக்கு ஓடுவேன். நான் போனால், "உன் ஆமண்டியாள் வந்திருக்கிறாளடா, அப்பா. நான் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அது கீழே வந்து விடும். என் மனது என்னுடையதாகவே இல்லை.

இராத்திரி படுக்கப் போனால் பாதி நாள் எங்காத்துக்காரரிடம் பேசவே மாட்டேன். "சௌந்திரம்மாள் ஏதோ கோபமாய் இருக்கிறார் போலிருக்கிறதே? என்ன கோபமோ? நான் என்ன அபசாரம் பண்ணினேனோ?" என்று எப்பொழுதும் போல எங்காத்துக்காரர் என்னிடத்தில் கொஞ்ச வருவார்.

"பேசாமலிருங்கள், எனக்குத் தலைவலி மண்டையை உடைத்துக் கொண்டு போகிறது" என்று சாக்கு சொல்லிக் கொண்டு படுத்துக் கண்ணை மூடிக்கொண்டு விடுவேன்.

இப்படி யிருக்கிற சந்தர்ப்பத்தில் எங்கப்பாவிட மிருந்து கடிதம் வந்தது. நான் தீர்த்தமாடாமல் இருக்கிறதாகக் கேள்விப்படுவதாகவும், ஐந்தாம் மாதம் பூச்சூட்டல் செய்யலாமென்றிருப்பதாகவும், என்னை அழைத்துக் கொண்டு போக எப்பொழுது வரலாமென்றும் அந்தக் கடிதத்திலிருந்தது. நான் இருக்கும்பொழுதே வீடு இந்த நிலைமையிலிருந்தால் நானும் ஊருக்குப் போய், சித்தியும் தினையோடு ஒட்டிக்

கொண்டிருந்தால் அப்புறம் இவள் கொட்டத்துக்குத் தங்கு என்ன ? தடை என்ன ?

போதாததற்குக் கடிதம் வந்த அன்று இராத்திரி எங்காத்துக்காரர் என்னிடத்தில் கிண்டலாய்ப் பேச ஆரம்பித்தார்.

"சௌந்தரம்மாள் ஊருக்குப் போகப் போகிறாப் போலிருக்கிறது ! போனால் ஒரு மாதத்துக்கு குறைந்து திரும்பி வருவாரா? அங்கே போனால் நம்ம ஞாபகம் ஏன் இருக்கப் போகிறது ? அழைத்துக் கொண்டு போகிற காரியத்தை உத்தேசித்தால் அனுப்பாமல் இருக்கிறதுக்கும் இல்லை. போக வேண்டியதுதான் ! ஆனால் இங்கே ஒரு ஆள் திண்டாடிக் கொண்டிருப்பானே என்று மாத்திரம் மறந்து விடாதீர்கள்" என்று இம்மாதிரி பேசினார்.

இதற்கு முன் ஒரு தரம் பிறந்தகத்துக்குப் போய் விட்டு வரட்டுமா என்று நான் கேட்டதற்கு, "நீ அங்கே போய் விட்டால் நான் இங்கே தனியாய் எப்படியிருக்கிறது ? இருக்கவே மாட்டேன். என்னை விட்டு விட்டுப் போகிறது என்கிற வேலையை வைத்துக் கொள்ளாதே, அம்மா" என்றார். இப்போ பேச்சோ இந்த மாதிரி வந்தது. இதற்கு என்ன அர்த்தம் !

எனக்கு மனக் கஷ்டம் தாங்க முடியவில்லை. தனியாய்ப் போய் உட்கார்ந்து கொண்டு ஒரு குரல் அழுதேன்.

(தொடரும்)

1943

ஆனந்த விகடன்

தீபாவளி மலர்

விலை ரூ. 3/-

நேயர்கள் தங்கள் ஊர் ஏஜண்டுகளிடம் இப்பொழுதே ரிஜிஸ்டர் செய்து கொண்டுவிடுவது நலம்.

நமது புத்தகசாலை

தமிழ்ப் பெரியார்கள்

(பேனா சித்திரங்கள்)

[ஆசிரியர்: ஸ்ரீ வ. ரா. பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை. விலை ரூ 2-8-0]

கதை எழுதி விடலாம் கட்டுரை எழுதி விடலாம். "ஏன் இப்படி எழுதினீர்?" என்று யாரும் சண்டைக்கு வர முடியாது. ஆனால், பிறரைப் பற்றிப் பேனா சித்திரங்கள் எழுதுவதென்பது மட்டும் ஆபத்தான காரியம். தர்ம சங்கடமான காரியமும்கூட. அதைச் செய்வதற்கு ரொம்பவும் தீரமும், துணிவும் வேண்டும். அதிகமாகவும் சொல்லிவிட முடியாது. குறைவாகவும் சொல்லிவிட முடியாது. உள்ளதை உள்ளது போலவே சொல்லியாக வேண்டும். அது நல்லதாயிருந்தாலும் சரி, கெடுதலாயிருந்தாலும் சரி; தராசையும் முத்திரை போட்ட படிக்கல்லையும் வைத்துக்கொண்டு எடை போடுகிறார்களே அதைப் போலத்தான் !

இத்தனை பொறுப்பும் சங்கடமும் உள்ள பேனா சித்திரங்களை எழுதுவதில் ஸ்ரீ வ. ரா. நிபுணர். "தமிழ்ப் பெரியார்கள்" என்ற இந்தப் பிரசுரம் அவருடைய திறமைக்கு ஒரு சிறந்த அத்தாட்சி என்றே கூற வேண்டும் !

"ஜன சமூகத்தைத் தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச் செய்தவர்கள் பெரியார்கள்" என்ற கொள்கையோடு எழுதப்பட்டிருக்கும் இந் நூலில் "ராஜாஜி", "டாக்டர் ராஜன்", "ஜியார்ஜ் ஜோஸப்", "எஸ். சத்தியமூர்த்தி", "வ. உ. சிதம்பரம் பிள்ளை", "எஸ். எஸ். வாஸன்", "திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்", "ஈ. வே. ராமசாமி நாயக்கர்", "கே. பி. சுந்தராம்பாள்", "என். எஸ். கிருஷ்ணன்", "வெ. ராமலிங்கம் பிள்ளை", "டாக்டர் வரதராஜலு நாயுடு" முதலிய பன்னிரண்டு பிரமுகர்களின் வாழ்க்கைச் சித்திரங்கள் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய பிரமுகர்களின் வாழ்க்கைத் தத்துவங்களையும் குணாதிசயங்களையும் வ. ரா. வெகு நுட்பமாகக் கவனித்துக் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது இந்த நூலில் அவர் தைரியத்தோடும் துணிவோடும் கூறியிருக்கும் நேர்மையான அபிப்பிராயங்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம் :—

ஸ்ரீ வ. ரா.

"ராஜாஜி சிற்சில விஷயங்களில் பிற்போக்காளர் என்பது என் கருத்து. என்றாலும், அவர் முதல் தமிழன், உயர்ந்த மனிதன், அற்புதமான நிர்வாகி, தீர்க்காலோசனைக்காரர் என்ற வகைகளில் அவருக்கு நாம் மரியாதை காண்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்."

"வாழ்க்கை என்ற போர்க்

களத்தில் அங்குலம் அங்குலமாக போராடி முன்னேறி வந்தவர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன். தாம் சம்பாதிக்கும் பணத்தை நன்மை பயக்கும்படியான வழிகளில் விநியோகம் செய்து ஜன சமூகத்துக்கு தொண்டு ஆற்றுவது ஸ்ரீ வாஸனது வாழ்நாள் கொள்கையாகும். வாஸனுடைய பொறுமையைப் பார்த்து நாம் எல்லாரும் பிரமிப்புத் தட்டிப் போக வேண்டியது தான். பதட்டமில்லாத நாக்கு, அவசரப்படாத மனது! அவருடைய வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது. சிறந்த எழுத்தாளர். பிறருடைய ஆதரவு சிறிது மில்லாமல் வாழ்க்கையில் வெற்றிக்கு மேல் வெற்றியைக் கண்டுவரும் ஸ்ரீ வாஸனை முதல்தரமான மேதாவி என்றே சொல்லுவேன்."

"சுந்தராம்பாள் சிறந்த தேசாபிமானி. அவரோடு சம்பாஷணை செய்வது நல் விருந்தாகும். சொல்லுவதை ரஸித்துக் கேட்பதில் சுந்தராம்பாளுக்கு இணை எத்தனை பேர் இருக்க முடியும்?"

"செய்வன திருந்தச் செய்" என்ற கொள்கையைக் கொண்டிருப்பவர் என். எஸ். கிருஷ்ணன்.

"நாமக்கல் ராமலிங்கம் புரட்சிக்காரப் புன்னகைக் கவி."

இப்படியே வ. ரா. வின் பேனாச் சித்திரங்களி லிருந்து இன்னும் எவ்வளவோ உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். இம்மாதிரியான புஸ்தகம் தமிழ் நாட்டிற்கே புதிது; இதற்குத் தமிழர்கள் நல்ல வரவேற்பு அளிப்பார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமே யில்லை.

ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம்

பிரசுரம்: ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், ஸ்ரீ சங்கர மடம், கும்பகோணம். விலை: அணா 8.

பகவான் மீது திருஷ்டியை பக்தர்கள் நிறுத்துவதற்குச் சாதனமாக இந்தப் பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் அமைந்திருக்கிறது. பரம் பொருளின் திரு உருவத்தை மனத்தினுள் உருவகப்படுத்திக் கொண்டு பக்தி செய்ய இது உதவுகிறது. அழகான பதங்களில் அமைந்திருக்கும் இந்த அருமையான சுலோகங்கள், படிக்கும் போதே ஓர் ஆனந்தத்தையும் உள்ளத் தூய்மையையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இவைகளை சகலரும் படித்து அறிந்து கொள்ளும்படி ஸ்ரீ பண்டிட் ஏ. எம். ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்களும், ஸ்ரீ வே. நாராயணன் அவர்களும், ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் தெளிவான அனுவாதங்கள் எழுதி யிருக்கிறார்கள்.

ஸ்ரீ முகுந்த மாலை

பிரசுரம்: ஸ்ரீ காமகோடி கோச ஸ்தானம், ஸ்ரீ சங்கரமடம், கும்பகோணம். விலை: அணா 5.

பகவானுடைய கல்யாண குணங்களை வர்ணிக்கும் இந்த நூலின் நாற்பத்து நான்கு சுலோகங்களும் மதுரமான பதங்களும், உத்கிருஷ்டமான பொருளும் கொண்டவை. ஸ்தோத்திர முறையில் அமைந்து, பக்தி ரஸம் ததும்பும் இந்த நூல், ஆஸ்திகர்கள் அனைவரும் விரும்பிப் படிப்பது. ஸ்ரீ காமகோடி கோசஸ்தானப் பிரசாரங்கள் எல்லாவற்றையும் போல் இந்த நூலும் எல்லாரும் பக்தி மார்க்கத்தில் முன்னேறவும் சகல புருஷார்த்தங்களும் பெற்று வாழவும் அனுகூலமான பிரசுரமாகும். ஸ்ரீ ஸாஹிதிவல்லப டி. சுந்தராச்சாரியார் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

குழந்தைகளின் சரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் லிவர்க்யூர்

நோட்டீஸ்

எங்கள் வைத்திய நிபுணர் கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்வார். அவரை நேரில் காலையில் 9 முதல் 11-30 மணி வரை, மாலை 3-30 மணி முதல் 6 மணி வரை குழந்தைகளின் சரல் குலைக்கட்டி வியாதிகளைப்பற்றி ஆலோசனை கேட்கலாம்.

திருச்சினுப்பள்ளி — அக்டோபர் 10 & 11உ லிவர்க்யூர் ஆபீஸ், 17, தேரடிக் கடைத் தெரு, தெப்பகுளம்.
புதுக்கோட்டை — அக். 12உ ஹோட்டல் மானஸரோவர்.
காரைக்குடி — அக்டோபர் 13 & 14உ ஏ. வி. & சன்ஸ், டிராவலர்ஸ் ரூம்ஸ்.
தேவகோட்டை — ,, 15உ மீனாக்ஷி ஸ்டோர்ஸ்.
மதுரை — ,, 17 & 18உ T. N. C. நாகலிங்கம் பிள்ளை, வடக்குச் சித்திரை வீதி.
தென்காசி — அக்டோபர் 20உ மெடிகல் ஸ்டோர்ஸ்.
திருவனந்தபுரம், நாகர்கோயில், திருநெல்வேலி, கல்லிடைக்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்வார்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
மதராஸ் — கும்பகோணம்

மற்றுமொரு வெற்றிகரமான வருஷம்
1942-ல் புது வியாபாரம்
ரூ. 9,50,00,000க்கு அதிகம்
இந்தியாவின் மிகப் பெரிதானதும், பலமானதுமான லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியால் அளித்துவரும்
சேவையிலும் பாதுகாப்பிலும்
பொதுஜன அபிமானமும் அதிகரித்துவரும்
— நம்பிக்கையுமே அடையாளம் —
ஓரியண்டல்
கவர்ன்மென்ட் செக்யூரடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,
இந்தியாவில் ஸ்தாபிதம் 1874 — தலைமை ஆபீஸ்: பம்பாய்
கிளை ஆபீஸ்கள்:—
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, ஜி.டி., மதராஸ்.
நெ. 3, மெக்டோனல்ட் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி.
மேலமாசி வீதி, மதுரை, இஸ்மெயில் ராவுத்தர் தெரு, கோயமுத்தூர்.

நிலவில் நடந்த நாடகம்

ஆர். எம்.

நிலா வெளிச்சத்தில் கொள்ளை அடிக்க மாட்டார்கள் திருடர்கள் என்ற ஒரு நம்பிக்கை இருந்து வருகிறதல்லவா? அந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிய வீராசாமி தீர்மானித்தான். அதற்காக மஞ்சள்குடி கிராமத்தில் பெரிய பணக்கார மிராசுதார் என்று பேர் பெற்ற சோமநாத முதலியார் வீட்டில் ஒரு பௌர்ணமி யன்று கொள்ளை யடிப்பதென்று அவன் முடிவு செய்தான்.

முதலியார் வீட்டுக் கெதிர்த்தாப்போல் இருந்த மைதானத்தில் ஒரு பந்தல் கிளம்பியது. அதில் வர்ண விசித்திரங்களால் மயக்கும் 'கலர்' பல்புகளை வேலையாட்கள் பொருத்தினார்கள். மஞ்சள் குடி ஜனங்கள், "என்ன? என்ன? இங்கே என்ன நடக்கப் போகிறது?" என்று ஆச்சரியத்துடன் வினவினார்கள். யாருக்கும் விஷயம் என்னவென்று தெரியவில்லை. பந்தலைச் சுற்றிப் படுதாப் போட்டிருந்தது. உள்ளே நடப்பதென்னவென்று வெளியார் ஒருவருக்கும் தெரிய முடியாதபடி கட்டுக் காவல் வேறு போட்டிருந்தது.

இரவு ஒன்பது மணிக்கு ஒரு ஆசாமி முதலியார் வீட்டில் நுழைந்து, "ஸார்! உங்கள் வீட்டுக் கெதிரில் பொம்மலாட்டக் காட்சி நடத்தப் போகிறோம். வெகு தமாஷாக இருக்கும். புதுப் புது விதமான நாட்டியங்கள் எல்லாம் செய்து காண்பிப்போம். தாங்கள் வர வேண்டும்" என்று அழைத்தான்.



முதலியார், "சரிதான்; ஆகட்டும்!" என்று சொன்னார். அப்போது அவருக்குப் பொம்மலாட்டத்துக்குப் போவதாக உத்தேசம் இல்லை. ஆனால் ஆட்டம் ஆரம்பித்து அரை மணிக்கெல்லாம், அவர் மகள் ஓடி வந்து, "அப்பா! ஆச்சரியமாயிருக்கிறது! நீயும் வா அப்பா! வந்து பார் அப்பா!" என்று கையைப் பற்றி இழுக்கவே, அவர் வாசல்புறம் வந்தார்.

ஒரே நிமிஷத்தில் அவருடைய மனதைப் பொம்மலாட்டம் கவர்ந்து விட்டது. வெளியில் வந்தவர், ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டார். மற்றும், தமது வீட்டில் ஒருவர் பாக்கி யில்லாமல் எல்லாரையும் பொம்மலாட்டம் பார்க்க வெளியில் அழைத்து விட்டார்.

ஆட்டம் இன்னும் அதிக விறு விறுப்புடன் தொடர்ந்து நடந்தது.

முதலியார் வந்து உட்கார்ந்ததும், ஒரு ஆள் மற்றொரு ஆளைப் பார்த்து ஏதோ ஜாடை செய்தான்; அவன் வேறொருவனைப் பார்த்து ஜாடை செய்யவே, மூன்றாமவன் எழுந்து வேகமாக வெளியே சென்றான்.

* * *

சுமார் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு சந்தடி செய்யாமல் ஒரு மோட்டார் கார் முதலியார் வீட்டுக்குப் பின் புறம் வந்து நின்றது. அதிலிருந்து வீராசாமி இறங்கினான். 'டார்ச்' லைட்டுடன் மெள்ள அந்த வீட்டின் கொல்லைப் புறம் வழியாக உள்ளே நுழைந்தான். மிகப் பழகிய இடம் போல, மேல் மாடிக்குச் சென்று, இரும்புப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த வைர ஆபரணங்களை எடுத்து ஒரு டிரங்குப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டான். வந்தவழியே சந்தடியின்றி திரும்பி மோட்டாரில் வந்து உட்காரவே, மோட்டார் காற்றினும் வேகமாகப் பறந்து சென்றது.

பொம்மலாட்டம் முடிந்து உள்ளே திரும்பிய முதலியார் கதவுகள் திறந்து கிடப்பதைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாக மாடிக்கு ஓடினார். இரும்புப் பெட்டியைத் திறந்ததும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டார். இருபதினாயிரம் ரூபாய் நகைகள் போயினவே என்று அலறினார்.

பொம்மலாட்டக்காரர்கள் மேல் சந்தேகம் வந்தது. உடனே அவர்களை வரவழைத்து விசாரணை நடத்தினார். ஆனால் அவர்கள் தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்றார்கள். யாரோ ஆயிர ரூபாய் பேசி தங்களை அமர்த்தினதாகவும், தங்கள் பணம் வந்து விட்டதாகவும் சொன்னார்கள்.

மஞ்சள்குடி முதலியாரின் களவு போன நகைகள் அப்புறம் அவருக்குத் திரும்பவே யில்லை!

* * *

இது நடந்து சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு வீராசாமி ஒரு நாள் சென்னைப் பட்டணத்துப் பார்க்கு ஒன்றில் உட்கார்ந்து தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தான். அவனுடன் இருந்தவன் நண்பன் கில்லாடி கோவிந்தன்.

கோவிந்தனுக்கும் வீராசாமிக்கும் இடையில் அதிக ரகசியங்கள் இல்லை. ஒருவன் வேலையை மற்றவனுக்குத் தாராளமாகச் சொல்லிக் கொள்வது முண்டு.

உங்கள் பற்களுக்கு சிறந்ததே தகும்

டாக்டர் ப்ளெஷர்ஸ்

டென்டல் க்ரீம்

சென்னைக்குப் பிரதிநிதிகள்:

K. பார்த்தசாரதி & கோ.,

117, அரமனைக்காரத் தெரு.

— ஜி. டி. மதராஸ். —

வீராசாமி சொன்னான்: "தம்பி! நான் ஒரு வேலை பண்ணினேன், தைரியமாய் ஆயிர ரூபாயைப் போட்டேன். ஒரு பொம்மலாட்டம் வைத்து, வீட்டி லிருப்பவர்களை வாசலுக்கு வரவழைத்தேன். பின் பக்கமாக நுழைந்து இருபதாயிரம் ரூபாய் வைரத்தைப் போனவாரம் கிளப்பிக் கொண்டு வந்து விட்டேன்!"

"நல்ல வேலைதான்! நான் ஒரு கிராமத்தில் இரண்டு வாரத்திற்கு முந்தி, இதை விடப் பெரிய வேலை செய்தேன். இரண்டாயிர ரூபாய் முதல் போட்டேன். ஒரு மிராசுதார் வீட்டு நகைகளைப் போலவே ஒரு 'ஸெட்' ரங்கூன் வைரத்தில் நகைகள் தயார்செய்தேன். மிராசுதார் வீட்டு நகைகளை எடுத்துக் கொண்டு, அவை இருந்த இடத்தில் இந்த நகைகளை வைத்து விட்டு வந்து விட்டேன். நாளைக்கும் அந்த மிராசுதாருக்கு விஷயம் தெரியாது! இதற்கு என்ன சொல்றே?" என்று கேட்டான் கில்லாடி கோவிந்தன்.

"நல்ல வேலை!" என்று ஒப்புக்கொண்டான் வீராசாமி. அவனுக்கு ஒரு சந்தேகம் வரவே, "தம்பி! உன் வேலையை யாரிடம் காண்பித்தாய்?" என்று கேட்டான்.

"யாரா? கிராமத்துக்கே பெரிய பணக்காரன்! அவன் சோமநாத முதலியார்னு பேரு!"

சற்றுத் திடுக்கிட்டவனாக வீராசாமி, "எந்த கிராமம்?" என்று கேட்டான் பரபரப்புடன்.

"மஞ்சள்குடின்னு சொன்னாங்க!" என்றான் கோவிந்தன்.

வீராசாமி அப்போது ஏன் மூர்ச்சை அடைந்தான் என்று கோவிந்தனுக்கு விளங்கவே இல்லை!

ஹைபோ

(ஸோடியம் ஹைபோ ஸல்பைட்)

100-க்கு 90-ம் சுத்தமானது முழுவதும் கரைந்து விடுவது. பளிங்குபோன்ற கற்களாக இருக்கும்.

தோல் பதனிடுதல், போட்டோ, ஸினிமா தேவைகளுக்கு ஏற்றது

விபரங்களுக்கு:

ஈஸன் இன்ஜினீரிங் கோ.

13/14, பிராட்வே, தந்தி: 'EASUN' மதராஸ்.

மற்றும்

எலக்ட்ரிக் மோட்டார்கள் டிரான்ஸ்பார்மர்கள், ஸ்விட்ச் கீர்கள், ஹார்ட்வேர் முதலியவையும் சப்ளை செய்வார்கள்.



"சசி"

அத்தியாயம்—25

பாலகிருஷ்ணய்யர் இறந்து இரண்டு வாரங்களுக்குப் பின் ஒரு நாள் மாலை ஆறு மணி இருக்கும், கோயமுத்தூரில் அவருடைய வீட்டு மெத்தை ஹாலில் சந்துரு மிகுந்த முகவாட்டத்துடன் அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த வக்கீல் வரதராஜ பிள்ளை, "மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள் ஸார்! எவ்வளவு அழுதாலும் மாண்டவர் மீளப் போகிறாரா, என்ன!..." என்று சந்துருவுக்கு ஆறுதல் கூறினார்.

சந்துரு சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டுப் பிறகு தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அவர் என் பெயருக்கு லட்ச ரூபாய் சொத்தை 'வில்' எழுதி வைத்து விட்டுப் போயிருப்பதனால் நான் ரொம்பவும் உற்சாகத்தோடுதான் இருப்பேன் என்று உலகம் நினைக்கும். ஆனால் என் இதயம் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனையை அந்த ஈசன் ஒருவர்தான் அறிவார்! அத்தை இறந்த துக்கம் ஒருபுறம், இப்படி என் அத்திம்பேர் இறந்த துக்கம் ஒரு புறம், இரண்டுமாகச்சேர்ந்து என்னை வருத்துகின்றன!...இனிமேல் என் மீது அன்பு வைக்கப் போகும் மனிதர்கள் யார் இருக்கிறார்கள்!...ஹூம்!..." என்று பெருமூச்சு விட்டான். அவனுடைய மனத் துயரைக் கண்ட அந்த வக்கீல் "துக்கம் என்னவோ ரொம்பவும் பெரிய துக்கந்தான்! ......இருந்தாலும் கொஞ்சம் மனதைத் தைரியப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று மேலும் தேறுதல் சொன்னார்.

"எவ்வளவோ தைரியப் படுத்திக் கொண்டுதான் பார்க்கிறேன். என்றாலும், துயரத்தை என்னால் மறந்திருக்க முடியவில்லை. எப்பொழுதும் என் அத்தையின் நினைவும், அத்திம்பேரின் நினைவும் என் உள்ளத்தில் தோன்றித் தோன்றி என்னை வாட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இதையெல்லாம் உங்களிடம் சொன்னால் உங்களுக்குத் தெரியப் போகிறதா என்ன?...ஒரு நாளும் இல்லை! நீங்களோ வக்கீல்...உங்கள் காரியத்தில்தான் நீங்கள் குறியாக இருப்பீர்கள்...என்னுடைய துக்கத்தை உணர்ந்து, எனக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம்

கொடுக்க மனம் வராது உங்களுக்கு!...சரி, கிடக்கட்டும்...... நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!...'' என்று சந்துரு தன் முகத்தைச் சற்றுக் கடு கடுப்பாக வைத்துக் கொண்டு கேட்டான்.

"பாங்கியிலுள்ள கணக்குகளை உங்கள் பெயருக்கு மாற்றி விடட்டுமா என்று கேட்கத்தான் வந்தேன். இனிமேல் எல்லாவற்றிற்கும் நீங்கள் தானே வாரிசு!''

"அதற்கு இப்போது என்ன அவசரம்? 'பாலகிருஷ்ணய்யர் இறந்ததும் இறக்காததுமாக அவருடைய பணத்தை யெல்லாம் சுருட்டிக் கொண்டு போய் விட்டான்' என்ற கெட்ட பெயர் எனக்கு வர வேண்டுமா என்ன? பண விஷயத்தைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். எனக்கு அவசரமாகப் பட்டணம் போக வேண்டிய அலுவல் இருக்கிறது. அதைப் பார்த்துக் கொண்டு திரும்பி வந்ததும் தான் இங்குள்ள காரியங்களைக் கவனிக்கப் போகிறேன். அது வரையில் இந்த வீட்டையும், இதிலுள்ள சொத்தையும் உங்கள் பொறுப்பிலேயே விட்டு விட்டுப் போகப் போகிறேன்."

"அதற்கென்ன! நீங்கள் எப்படிச் சொன்னாலும் கேட்கத் தயார்!...''

*   *   *

வக்கீல் வரதராஜ பிள்ளை விடை பெற்றுக் கொண்டு போன சிறிது நேரத்திற்கெல்லாம் சந்துருவைப் பார்ப்பதற்காக அவனுடைய 'நண்பன்' வந்தான். ஆமாம், கல்கத்தாவுக்குப் போகும் சமயத்தில் சந்துருவை ரயிலில் சந்தித்துப்பேசிய அதே நண்பன்தான். சந்துரு கல்கத்தாவிலிருந்து பாலகிருஷ்ணய்யருக்கு எழுதிய கடிதத்தைக் கூட அதே நண்பன் விலாசத்துக்குத் தான் அனுப்பி வைத்தான் என்பதும் வாசகர்களுக்கு ஞாபக மிருக்கும். அந்த நண்பன் வந்ததும் சந்துரு தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு மௌனமாக இருந்தானே யன்றி அவனை வரவேற்றுப் பேசவில்லை. என்றாலும், அந்த நண்பன் பொறுமையாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். ஆனால் வெகு நேரமாகியும், சந்துரு அவனை லட்சியம் செய்து பேசவே இல்லை. முகவாய்க் கட்டையில் கையை வைத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்த வண்ணமாயிருந்தான்.

கடைசியில் அந்த ஆசாமி தன் பொறுமையை இழந்தவனாய், "என்ன சந்துரு! இப்படிப் பேசாமலிருந்தால் என்ன அர்த்தம்? உன் வார்த்தையைக் காப்பாற்ற இன்னுமா மனம் வரவில்லை?...பாலகிருஷ்ணய்யர்தான் இறந்து விட்டாரே, இனி மேல் உன் காரியத்துக்கு ஆக்ஷேபணை சொல்ல வேறு யார் இருக்கிறார்கள்?'' என்றான்.

"இதோ பார், என்னை இனி மேல் தொந்தரவு செய்வதென்று வைத்துக் கொள்ளாதே!...இன்னும் பத்து நாள் கழித்து வந்தால்...உன்னிடம் ஒரு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு எங்கேயாவது போய் விடு!...அவ்வளவு தான் என்னால் முடியும்!'' என்று சற்று அதிகார தோரணையில் சந்துரு பதில் சொன்னான்.

"என்ன!...இன்னொரு தடவை சொல்லு!''

"...இன்னும் பத்துத் தடவைகள் வேண்டுமானாலும் சொல்லுகிறேன்...என்னிடம் ஐயாயிரம் ரூபாயைத் தவிர நீ வேறு எதையும் எதிர்பார்க்க வேண்டாம். ஆமாம். கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்...''

"அப்படியானால், உன் மீது பழி வாங்க நான் பின் வாங்க மாட்டேன்!''

"டேய்! ஜாக்கிரதையாகப் பேசு! என்மீதா பழி வாங்கப் போகிறாய்?... அதற்குள் உன்னைப் போலீசார் கையில் ஒப்படைக்க ஏற்பாடு செய்கிறேனா இல்லையா, பார்த்துக் கொள்!''

"எதற்காக என்னைப் போலீசார் கையில் ஒப்படைப்பது?''

"பாலகிருஷ்ணய்யரை விஷம் வைத்துக் கொன்றதற்காக!...... அதற்கு வேண்டிய ருசு வெல்லாம் என் கையில் இருக்கிறது!... நான் கல்கத்தாவிலிருந்து உனக்கு அனுப்பிய 'ஸ்வாமி பிரசாத'த்தில் விஷத்தைக் கலந்து அவருக்குக் கொடுத்திருக்கிறாய். டாக்டர் மணவாள நாயுடுகூட அது விஷயமாக சாட்சியம் கூறத் தயார்...''

"பேஷ்! 'வில்' எழுதி வைத்தவர் மறுபடியும் அதை மாற்றி விட்டால் என்ன செய்வது என்று பயந்து கொண்டு நீ அல்லவா அவரைக் கொல்ல நினைத்து விஷத்தைக் கலந்து அனுப்பி யிருக்கிறாய்! உன்னைச் சந்தியில் இழுக்க என்னால் முடியாதா, என்ன?''

"சட்!...யாரைப் பார்த்து அப்படி சொல்லுகிறாய்?...இப்பொழுதே போலீஸாரிடம் உன்னை ஒப்படைக்க முடியும் என்னால்! இருந்தாலும், பழகிய தோஷத்தினால் உன்னை மன்னிக்க உத்தேசித்திருக்கிறேன். தலை தப்ப வேண்டுமென்று நினைத்தால்...நீ மரியாதையாகப் போய் விடு.நான் கொடுடுக்க நினைத்திருக்கும் ஐயாயிரம் ரூபாய் பணத்தோடு திருப்தியடைவதா யிருந்தால் நான் உனக்கு ஒரு கெடுதலும் செய்யாமலிருப்பேன்!... இல்லாவிட்டால் ...நான் எதற்கும் துணிந்து விடுவேன்...''

"சந்துரு!...கடைசியாகச் சொல்லுகிறேன்......வீணாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்காதே!...அவளிடம் நீ வாக்களித்தபடி அவளைக் கல்யாணம் செய்து கொள்வதுதான் நியாயம்! முன்புதான் உன் அத்திம்பேர் அந்த ஏற்பாட்டுக்குக் குறுக்கே நிற்பார் என்று சொல்லிக்கொண்டிருந்தாய். இப்போது அவ்விதமாகச் சாக்குச் சொல்வதற்கு இடமில்லாமற் போய் விட்டது...எனவே, இப்போது என்ன சொல்லுகிறாய்? அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா, இல்லையா?"

"அந்தப் பேச்சை மட்டும் விட்டு விடு! நான் விரும்பும் பெண் சாரதா தான்!...வேறு யாரைப் பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை ...தெரிந்ததா?...நான் கூறிய ஏற்பாட்டுக்கு இணங்குவது தான் புத்திசாலித்தனம்!"

"இதுதான் உன் முடிவான வார்த்தையோ?"

"ஆமாம்!"

"நிச்சயமான வார்த்தை தானே?"

"அதில் என்ன சந்தேகம்?"

"அப்படியானால் நான் என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் விடப் போவதில்லை. பாலகிருஷ்ணய்யரின் சொத்து உனக்குக் கிடைக்காதபடி செய்ய என்னால் முடியும். எல்லாம் மூர்த்திக்கே போய்ச் சேரும்படி செய்து விடுகிறேன், பார்!"

"அது உன்னாலும் முடியாது, உன் பாட்டனாலும் முடியாது?"

"ஏன் முடியாது?...பாலகிருஷ்ணய்யர் தம் சொத்து முழுவதையும் தம் பிள்ளையின் பெயருக்குத்தான் எழுதி வைத்து விட்டு இறந்து போனார். ஆகவே முதலில் எழுதிய 'வில்' செல்லுபடியாகாது. கடைசியாக எழுதப்பட்ட 'வில்'தான் செல்லுபடியாகும்."

"...நீ பொய் சொல்லுகிறாய்!"

"நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? பாலகிருஷ்ணய்யர் இறக்கும்போது நான் தானே பக்கத்தில் இருந்தேன்!... அந்தப் புதிய 'வில்'லை அவர் என்னிடந்தான் கொடுத்துவிட்டுப் போனார். ஒழுங்காக உன் வார்த்தையைக் காப்பாற்றி விட்டால், அந்த 'வில்'லைக் கிழித்துப் போட்டு விடலாம் என்று நினைத்தேன். ஆனால், இப்போது நீதான் மோசம் செய்யத் துணிந்திருக்கிறாயே! உனக்காக ஏன் இனி மேல் தாட்சண்யம் பார்க்க வேண்டும்?...வக்கீல் வரதராஜ பிள்ளையிடம் போய் விஷயத்தைச் சொல்லி விடப் போகிறேன். அவர் ஒரு கால் காசு கூட உனக்குத் தரமாட்டார்! மூர்த்தி ஜெயிலிலிருந்து வரும் வரையில் சொத்துக்களை 'சீல்' போட்டு பந்தோபஸ்தாக வைத்து விடுவார்!...நீ செய்யும் துரோகத்திற்கு அதுதான் சரியான தண்டனை!"

இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பெரிதும் திகில் அடைந்த சந்துரு சிறிது நேரம் ஏதோ சிந்தனை செய்து விட்டுப் பிறகு ஒருவித தீர்மானத்திற்கு வந்தவனாய், "சரி, உன் இஷ்டப்படியே நடக்கிறேன். ஆனால், முதலில் அந்த 'வில்'லை என்னிடம் கொடுத்து விட வேண்டும்" என்றான். அதற்கு அந்த ஆசாமி "நான் ஏமாந்தவனல்ல! முதலில் நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும். அதற்குப் பிறகுதான் நான் அந்த 'வில்'லைக் கொடுப்பேன்" என்று பதில் சொன்னான்.

"வீணாக நீ சந்தேகப்படவேண்டாம். சொன்னால் சொன்னபடியே நடக்கிறேன்!...ஆனால் இந்த மாதத்தில் யாரும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டார்கள். தை பிறக்கட்டும். என் வார்த்தையை நான் காப்பாற்றுகிறேன்."

"அப்படியானால் நானும் தை பிறந்து...அந்த 'வில்'லைக் கொடுக்கிறேன்."

"இப்படி பதிலுக்குப் பதில் சொல்லுவது நன்றாயில்லை."

"நீ செய்யும் காரியமும் நன்றாயில்லை!... ரொம்பவும் சாஸ்திரம் பார்ப்பவனைப் போல தை பிறந்த பிறகு தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று சொல்லுகிறாயே! ஏன் நாளைக்கே கல்யாணம் செய்து கொள்ளப்படாது? ...'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லு...இப்பொழுதே புறப்பட்டுப் போய் அவளை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்."

"நல்ல நாள் பார்க்காமல் கல்யாணம் செய்து கொள்ளுவது ரொம்பவும் அசட்டுத் தனம்! எதற்கும் சாஸ்திரிகளைக் கலந்து பேசுவதுதான் உசிதம் என்று தோன்றுகிறது.... வேண்டுமானால் அவருக்கு இப்பொழுதே ஒரு ஆள் அனுப்புகிறேன்! இந்த மாதத்திலேயே கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று அவர் சொல்லி விடும் பட்சத்தில் ...அப்படியே செய்து விடலாம்."

இவ்வாறு கூறி விட்டுச் சந்துரு மாடியி லிருந்து விடுவிடென்று கீழே இறங்கினான். இறங்கினவன் மாடிப்படிக் கதவைச் சந்தடியின்றிச் சாத்தித் தாளிட்டு விட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரை அவசரமாக அழைத்து வரும்படி ஒரு ஆளிடம் சொல்லி யனுப்பினான். பாலகிருஷ்ணய்யரை அந்த ஆசாமி விஷமிட்டுக் கொலை செய்திருக்கிறான் என்று குற்றம் சாட்டி அவனைப் போலீஸில் ஒப்படைத்து விடலாமென்பது அவனுடைய யோசனை! அப்படிச் செய்யா விட்டால் கடைசியாக எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் 'வில்'லை மூர்த்தியிடம் அவன் எப்படியாவது கொண்டு போய்க் கொடுத்து விடக் கூடும் என்பது சந்துருவின் பயம்.

சந்துரு கீழே இறங்கிப் போய் கால் மணி நேரமாகியும் திரும்பி வராததைக் கண்ட 'நண்பனு'க்கு திடீரென்று சந்தேகம் தோன்

மலைகளில் உயர்ந்தது இமயமலை

மலைவாழைப் பழங்களில் சிறந்தவை சிறுமலைப் பழங்கள்

கிடைக்குமிடம்:

V. P. A. R. CHANDRASEKARAN & BROS.

PLANTERS

No. 14, BUNDER STREET, G. T., MADRAS.

Head Office:

PATTIVIRANPATTI — MADURA DT.

றவே, எழுந்திருந்து வெளியே போய்விடப் பார்த்தான். ஆனால் மாடிப் படிக்கதவு வெளிப்பக்கத்தில் தாளிடப் பட்டிருந்ததை அறிந்ததும் அவனுடைய சந்தேகம் ஸ்திரமாகி விட்டது. "சரிதான்! நம்மீது ஏதோ குற்றத்தைச் சாட்டிப் போலீஸில் நம்மை ஒப்படைக்கத் தான் ஏற்பாடு செய்யப் போகிறான் போலிருக்கிறது! இப்பொழுதே இந்த இடத்தை விட்டுத் தப்பிப் போயாக வேண்டும். வெளியே போன பிறகு அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும்" என்று தீர்மானித்தவனாய் அந்த அறையைச் சுற்றிக் கவனித்துப் பார்த்தான் ஒரு தடவை. வெளி மாடிக்குப் போவதற்கு அங்கு ஒரு மூலையில் வழி இருந்தது. "நல்ல வேளை! இருட்டி விட்டது. யாரும் நம்மைக் கவனிக்க மாட்டார்கள்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, அவன் சட்டென்று அந்த வழியாக வெளி மாடிக்கு வந்து சந்தடி செய்யாமல் வாசல் பக்கத்தில் இருந்த ஒரு கம்பத்தைப் பிடித்துக் கொண்டு வெளியே இறங்கித் தெருவில் நடமாடிக் கொண்டிருந்த ஜனக் கூட்டத்தில் புகுந்து ஓடிப் போய் விட்டான்!

மேற்கூறிய சம்பவங்கள் நடந்த மறு நாள், வக்கீல் வரதராஜ பிள்ளையின் வீட்டுக்குச் சென்று சில முக்கிய விஷயங்களை அவரிடம் அந்தரங்கமாகத் தெரிவித்து விட்டு அன்று இரவு ரயிலிலேயே புறப்பட்டுப் பட்டணத்துக்கு வந்து விட்டான் சந்துரு.

பட்டணத்துக்கு வந்ததும் சாரதாவைப் பற்றி அவன் கேள்விப் பட்ட செய்தி அவனுக்கு அளவில்லாத உற்சாகத்தை அளித்தது! "சாரதாவும், அவள் தகப்பனாரும் இப்போது சுப்பராயனுடைய வீட்டில் இல்லையாம். டவுனில் பிள்ளையார் கோவில் முப்பதாம் நம்பர் வீட்டில் தனியாகக் குடித்தனமா யிருக்கிறார்கள் போலிருக்கிறது. சுப்பராயன் தான் அவர்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு நாள் சாரதாவின் தகப்பனார் இங்கு வந்து எல்லாவற்றையும் என்னிடம் சொல்லி விட்டுப் போனார்" என்று போட்டோகிராப்பர் வடிவேல் பிள்ளை விவரமாகத் தெரிவித்தான்.

சாரதாவைச் சந்தித்துத் தன்னுடைய அந்தரங்க ஆவலை அவளிடம் தெரிவிக்கும் காலம் நெருங்கி விட்டதென்று எண்ணிய சந்துரு அன்று சாயந்திரமே டவுனிலுள்ள சாரதாவின் வீட்டுக்குப் போனான். அப்போது சபேசய்யர் வீட்டிலில்லை. கோவிலுக்குப் போயிருந்தார். சாரதா மட்டுந்தான் இருந்தாள். சந்துரு அவளிடம் பாலகிருஷ்ணய்யர், பார்வதியம்மாள் இருவரும் இறந்த செய்திகளைப் பற்றிக் கூறிவிட்டு முடிவில் "கல்கத்தா முழுவதும் சுற்றிப்பார்த்து விட்டேன். மூர்த்தியைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவன் யாரோ ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு கப்பல் ஏறிச் சிங்கப்பூருக்குப் போய் விட்டான் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்!..." என்று ஒரு பெரிய புளுகாகப் புளுகினான்.

அதைக் கேட்டதும் சாரதா "ஐயையோ!" என்று துயரந் தாங்க முடியாமல் உரக்கக் கதறி விட்டாள்.

"சாரதா, நீ அதைரியப்பட வேண்டியதில்லை என்றே சொல்லுவேன். உன் வாழ்க்கையை இன்பமயமாக்குவதற்கு வேறு வழியில்லாமல் போய் விடவில்லை! அது விஷயமாகப் பேசுவதற்காகவே தான் இப்போது நான் வந்தேன்" என்று சந்துரு ரொம்பவும் அன்பு ததும்பும் குரலில் ஆரம்பித்தான். அதற்குள் சாரதா குறுக்கிட்டு, "எனக்கு நல்லது செய்ய எண்ணுகிறவர்களுக்கு இடையூறுகள் தான் ஏற்படுகின்றன!... பாவம், சுப்பராயனுடைய மனைவியின் மனதை யாரோ கெடுத்து விட்டார்கள். நான் கெட்டவள் என்று யாரோ அவளுக்கு லெட்டர் எழுதினார்களாம். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு என்னை அங்கிருந்து வெளியே விரட்டி விடும்படி சுப்பராயனிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். வேறு வழியில்லாமல், என்னை இங்கே ஒரு ஜாகை பார்த்துக் கொண்டு வந்து வைத்திருக்கிறார். எனக்கென்னவோ அவருக்கு இப்படியெல்லாம் தொந்தரவு கொடுத்துக் கொண்டு இங்கு இருக்க இஷ்டமே யில்லை!" என்று கண்ணீருடன் தெரிவித்தாள்.

"சாரதா, அதைத்தான் நானும் சொல்லுகிறேன்! தன்னந் தனியாக ஒரு ஸ்திரீ வாழ்க்கை நடத்துவதில் எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன. ஆகவே நான் ஒரு யோசனை கூறுவேன்..."

"என்ன யோசனை அது?"

"நீ என்னோடேயே இருந்து விடு! அப்போது ஒரு கஷ்டமும் இருக்காது! நல்ல வேளையாகத் தான் உனக்கும் மூர்த்திக்கும் நடந்த விவாகம் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியதாயில்லை!..."

"நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவே இல்லையே!"

"புரியவில்லையா! நான் உன் மீது வைத்திருக்கும் காதலின் அளவை நீ அறிந்திருப்பாயானால், உனக்குப் புரிந்திருக்கும்!"

இவ்வாறு கூறியவாறு சாரதாவின் கரத்தை மெள்ளப் பிடித்தான் சந்துரு! பிடித்ததுதான் தாமதம், "விடுங்கள் கையை!" என்ற கூச்சலுடன் சாரதா தன் கையை வெடுக்கென்று விடுவித்துக்கொண்டு, "என்ன இது! உங்களை யோக்யர் என்றல்லவா இதுவரையில் நினைத்திருந்தேன்!" என்று ஆத்திரத்தோடு கத்தினாள்.

"சாரதா! இவ்வளவு தூரம் உன் மீது அன்பு வைத்திருக்கும் என்னை இப்படி நிராகரிப்பது நியாயமில்லை. மூர்த்தியின் சொத்து முழுவதும் இப்போது எனக்குத்தான் வந்து விட்டது. நீ மட்டும் இணங்குவாயானால் உன்னை ராணி போல் வைத்துக் கொண்டாடுவேன்!...... நன்றாக யோசனை செய்து பார்!........ மூர்த்தியோ இனி மேல் திரும்பி வரப் போவதில்லை. உலகத்தாரின் நிந்தைக்கெல்லாம் உட்பட்டு நீ துன்பப்பட வேண்டாம் என்பது என் விருப்பம்!......உன்னைக் கைவிட்டு விட்டுப் போன ஒருவனை நினைத்து மனங் கலங்குவது அசட்டுத்தனம் என்று தான் நான் கூறுவேன்!......"

சந்துரு இவ்விதம் பேசிக் கொண்டே மீண்டும் சாரதாவின் கைகளைச் சடக்கென்று பிடித்துக் கொண்டு, அவளைத் தழுவப் போனான்! சாரதா அப்போது "சீசீ! விடு கையை!" என்று மிகுந்த கோபத்தோடு கர்ஜித்தவளாய், திடீரென்று ஏற்பட்ட பலத்தினால் தன்னைச் சந்துருவின் பிடிகளிலிருந்து விடுவித்துக் கொண்டு வாசல்பக்கமாக விரைந்தாள். ஆனால் சந்துரு அவளைச் சட்டென்று தடுத்து, மீண்டும் அவள் கைகளைப் பிடித்து முரட்டுத்தனமாகக் கூடத்திற்கு இழுத்துக்கொண்டு வந்தான். கலவரமும் பீதியுமடைந்த சாரதா "ஐயையோ!" என்று கூக்குரலிட்டாள். அதே சமயம் அந்த வீட்டுக்குள் நுழைந்த சபேசய்யர் சாரதாவின் உதவிக்குச் செல்லவே, சந்துரு அவரை ஒரே தள்ளாகக் கீழே தள்ளினான். பிறகு ஏதோ தீர்மானத்திற்கு வந்தவனாய் "இன்று நீங்கள் இரண்டு பேருமாக என்னை அவமானப் படுத்தி விட்டீர்கள்! நான் இதற்குப் பழி வாங்காமல் விடப் போவதில்லை!" என்று ஆத்திரத்தோடு சபதம் செய்து விட்டு அங்கிருந்து வெகு வேகமாக வெளியே வந்து விட்டான்!

(தொடரும்)

தபால்கார ரங்கையன்

"கீதா"

எங்கள் ஊர் தபால்கார ரங்கையா நாயுடுவை எளிதில் மறக்கவே முடியாது. நல்ல பரோபகாரி. வயது ஐம்பதுக்கு மேற்பட்டவன். அவனுடைய அப்பாவித் தோற்றமே, நமக்கு அவனிடம் ஒரு அநுதாபத்தைத் தூண்டும். தும்பைப் பூவும் தோற்கும்படி வெள்ளை வெளேரென நரைத்த அவன் தலை மயிரும், வண்ணான் சாலைக் கண்டு வருஷக் கணக்கான காக்கி கிஜாரும் கோட்டும் கண்கொள்ளாக் காட்சிகளாகத் திகழும்.

1942-ம் வருஷத்தில் ஏற்பட்ட யுத்த கலாட்டா காரணமாக அந்த ஊரில் புதிதாக நாங்கள் வாசம் செய்ய வந்தோம். அது ஊர் என்பதை விடப் பெரிய கிராமம் என்று சொல்லலாம். அங்கு தபாலாபீஸ் கிடையாது. அங்கிருந்து மூன்று மைல்கள் தூரத்திலிருந்த நகரத்தில் தான், தபாலாபீஸ், ஹைஸ்கூல் எல்லாமுண்டு. எங்கள் வீட்டுக்கு அநேகமாகத் தினம் ஏதாவது தபால் வரும். ஆகவே, நாயுடு தினமும் வருவான். முதல் நாள் அந்த கிராமத்துக்குப் போனவுடன், முதற் தடவையாக எங்கள் வீட்டுக்கு வந்தபொழுது என்னிடமிருந்து எங்கள் பூர்வோத்திரங்களை விசாரித்துக் கொண்டான். என்னைப் 'பாப்பா' என்று அவன் கூப்பிடுவது வழக்கம்.

பிரதி தினமும் காலை எட்டு மணிக்குத் தபாலாபீஸை விட்டு அவன் புறப்பட்டானானால், வழியிலுள்ள கிராமங்களுக்குத் தபால் பட்டுவாடா செய்துகொண்டு எங்கள் ஊருக்கு வரப் பகல் ஒரு மணியாகி விடும். நல்ல வெய்யிலில் களைத்து வருவான். வியர்வை அருவிபோல் தலையிலிருந்து வழிந்தோடும். 'உஸ்' என்ற ஒரு நீண்ட பெருமூச்சுடன் எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து விடுவான். இங்குதான் அந்த கிராமத் தபால்கள் போடும் பெட்டி அமைக்கப்பட்டிருந்தது. சில சமயங்களில், மோர் வாங்கிக் குடிப்பான். நாளடைவில் அவன் எங்களுடன் நெருங்கிப் பழகி விட்டான். அவன் வரும் நேரம் அநேகமாக எங்கள் வீட்டில் காப்பி நேரமாக இருக்கும். ஆகையால் முக்கால்வாசி, ஒரு டம்ளர் காப்பி அல்லது டீ வழக்கமாகக் கொடுப்போம். அதை அவன் வெகு ஆவலுடன் வாங்கிக் குடித்து விட்டு நன்றி நிறைந்த கண்களோடு வணங்கி விட்டுப் போவான்.

ரங்கையா நாயுடுவிற்குக் கள்ளங் கபடு கிடையாது. பொறுமை அவனுக்கு அதிகம்; இல்லாவிட்டால் அந்த கிராம ஜனங்கள் கேட்கும் அர்த்தமற்ற மூடக் கேள்விகளுக்கு, நம்மால் அவனைப் போல, அவ்வளவு சாந்தமாகவும் யதார்த்தமாகவும் பதிலளிக்க முடியவே முடியாது. மணியார்டர் ரசீதுகளையோ, அல்லது வேறு 'அக்னாலெட்ஜ்மெண்ட்' ரசீதுகளையோ பெற்றுக் கொண்ட ஜனங்கள், அதை அவனிடம் காட்டி "அதில் என்ன எழுதியிருக்கு. படித்துச் சொல்லுங்க, நாயுடு அய்யா!" என்று கேட்பார்கள். அநேகமாக அவன் அவர்களுடன் நன்கு பழகியவனாதலால், கோபமடையாமல், தன் கைச் சரக்கை உபயோகித்து, கடிதங்களைப் படிப்பது போல சமாசாரங்களை வெளியிடுவான். அவர்களும் திருப்தியோடு போய்விடுவார்கள். நாயுடு இந்த வகையில், கிராம ஜனங்களுக்கு ரொம்பப் பிரிய பாத்திரனாக இருந்து வந்தான்.

நாயுடுவிற்கு மனைவி கிடையாது. ஒரே ஒரு பெண்ணைப் பெற்ற சொற்ப காலத்துக்குள் அவள் இறந்து விட்டாளாம். தற்காலம் அவன் தன் ஒன்று விட்ட சகோதரி வீட்டில் பணம் கொடுத்துச் சாப்பிட்டு வருகிறான். மகள் கௌரி கல்யாணமாகி மாப்பிள்ளையுடன் வீட்டோடுதான் இருந்தாள். மருமகன் ஒரு செட்டி கடையில் கணக்கெழுதி வந்தான். அந்தச் செட்டி மூன்று வருடங்களுக்கு முன்பு சிங்கப்பூர் போனபோது, அதிகச் சம்பளம் கொடுத்து மாப்பிள்ளையையும் அழைத்துப்போய் விட்டான். மகள் கௌரியும்கூடவே போய் விட்டாள். அது முதல் நாயுடு தன் ஒன்று விட்ட சகோதரியுடன் வசித்து வருகிறான். எவ்வளவு தடுத்தும் கேட்காமல், கௌரி தகப்பனாரைப் பிரிந்து கணவனுடன் கப்பலேறிப் போய் விட்டாள். தன் மனைவியின் இறந்த கதையை நாயுடு விஸ்தரிக்கையில் வாஸ்தவமாகவே, அவன் கண்களில் கண்ணீர் புலு புலு வென்று உதிர அழுகை வந்துவிடும். தன் மகளிடமிருந்து வரும் கடிதங்களை வெகு பத்திரமாக வைத்திருந்தான். அவளும் பிதாவிற்கு மாதம் ஒரு கடிதமாவது போட்டாள். உண்மையில், கடிதங்கள் மூலம் தன் தந்தைமேல் இத்தகைய அன்பை வெளியிடும் பெண், எப்படி அவரைப் பிரிந்து இவ்வளவு தொலை போக சம்மதித்தாள் என்று எனக்கு வியப்பாக இருக்கும்!

நாயுடுவிற்குத் தற்பெருமைஅதிகம். அசடு என்று கூடச் சொல்லலாம். ஆனால் வேலையில் அவன் புலி. அவனுடைய சம்பளம் பதினாறு ரூபாயும் அவன் வேலைக்குத் தகுந்த கூலி அல்ல என்று கூடச் சொல்லலாம்.

யுத்த காலமாகையால் எங்கள் வீட்டில் ஜனம் நிறைந்திருந்தது. என் சகோதரிகள் அத்திம்பேர்களிடமிருந்து கடிதத்தை எதிர் பார்ப்பார்கள். யுத்த இலாகாவில் வேலை பார்த்த என் சகோதரன் அப்போது பர்மாவில் இருந்தான். அவனிடமிருந்து ஆவலோடும், கவலையோடும், கடிதத்தை எதிர் பார்ப்போம். காலை பத்து மணி முதல் இரண்டு மணி வரை எனக்கு வீட்டிற்குள் இருப்பே கொள்ளாது. அநேகமாக எல்லாரும் அடிக்கடி வாசற் பக்கம் வந்து எட்டிப் பார்ப்பார்கள். நான் திண்ணையை விட்டு நகர மாட்டேன். கண்கள் எதிர்க் கோடியையே நோக்கும். இடது தோளில் பையுடன் நாயுடு உருவம் கோடியில் தென்பட்டதோ இல்லையோ, எங்களுக்கு உற்சாகம் பொங்கும். இருப்பே கொள்ளாமல் தேகம் பரபரப்படையும். அந்தக் கோடிக்கே ஓடிப் போய்த் தபால்களை வாங்கி விட வேண்டுமென்று ஆவல் பொங்கும். அதேபோல அநேகர் அவனை எதிர் பார்ப்பார்கள். வேலையில்லாப் பட்டதாரி அப்புதினம் தன் மனுவிற்கு பதிலை எதிர் நோக்குவான். அப்போது நாயுடு, முகத்தில் பெருமை மிதக்கும் மகிழ்ச்சியோடு, "பாப்பா, எத்தினி பேர்கள் என் வரவுக்காக காத்திருக்கிறாங்க, பாத்தியா?" என்று சிரித்தபடி கேட்பான்.

ஒரு நாள் அவன் என்னிடம் வந்து "என்ன பாப்பா, என்னிடம் சொல்லவே இல்லியே! ஓ ஹோ! அடுத்த மாதத்திலிருந்து என் தயவு உனக்கும் வேண்டியிருக்கும். நாயுடுவை மறக்கமுடியாது, தெரியுமா?" என்றான். என் விவாகம் அடுத்த மாதம் நடப்பதாயிருந்ததை, அப்பா மூலம் அன்று தான் அவன் அறிந்திருக்கிறான். நான், "போ நாயுடு! பரிகாசம் பண்ணாதே" என்று கோபித்தேன். "ஐயோ பரிகாசமா? என் உயிரையே என்னிடமிருந்து பிரிப்பது போல அல்லவா இருக்கிறது? மாப்பிள்ளைக்கு பம்பாயிலல்லவா வேலையாம்? பாப்பா! வாஸ்தவமாகச் சொல்லுகிறேன். என் மகள் கௌரியை நீ பார்த்ததில்லை. அசல் நீ தான் அவள்! அவள் சிங்கப்பூர் போனதும் எனக்குப் பைத்யம் பிடித்துவிடும் போல இருந்தது. நல்ல காலத்துக்காகத்தான் ஸ்வாமி, அப்பாவையும் உங்களையும் கொண்டு விட்டார். உன்னைப் பார்க்கையில் என் கௌரியையே தான் பார்க்கிறேன். என் உள்ளம் அதனால் பூரிப்பதை ஸ்வாமி அறிவார். உன் அருகில் நின்றால் அவளை உன் சகோதரி என்று தான் கூறலாம். ஆனால் நீ நன்றாக இருந்தால் எனக்கு சந்தோஷந்தான். பாப்பா! எனக்காக நீ இங்கேயே இருக்க முடியுமா? அந்தந்தக் காலத்தில் போகுமிடங்களுக்கு போய்த்தானே ஆகவேண்டும்?" என்று நா தழ தழக்கக் கூறினான். அவனுடைய குழிந்த கண்களின் ஓரத்தில் இரு துளி கண்ணீர் துளித்து நின்றது.

மறுநாள் அவன் கௌரியை சிறு வயதில் எடுத்த போட்டோ ஒன்றைக்கொண்டு வந்தான். தலை முதல் கால் வரை ஆபரணங்கள். நல்ல லக்ஷணமாக இருந்தாள். "பாப்பா! எனக்குக் கல்யாணமாகி எட்டு வருஷங்கள் கழித்துப் பிறந்தவள் கௌரி. ரொம்ப அருமையாக வளர்த்தேன். ஆண் பிள்ளை போல ரூபாய் செலவழித்துப்பள்ளியில் படிக்க வைத்தேன். எட்டுக் கிளாஸ் படித்திருக்கிறாள். நரைத்துக் கறுத்து முதுமையுடன் போராடும் என்னைப் பார்த்த பின் என் குழந்தை அழகு

என்றால் கேட்பவர் சிரிக்கலாம். ஆனால், பாப்பா! அவள் தாய் நல்ல அழகி. அவள் மனைவியாக வாய்த்தது என் அதிர்ஷ்டமே யாகும். ஆனால் நான் கொடுத்துவைக்காத பாவி. ஒரு தடவை அவளுடன் நான் ரயில் பிரயாணம் செய்கையில், ரயிலில் கூட்டம். அவளை உட்கார வைத்து நான் நின்று வந்தேன். பிரயாணிகளில் சிலர், அவளை யாரோ பெரிய மனிதன் மனைவி யென்றும், நான் சேவகன் என்றும் நினைத்துவிட்டார்கள். ஏனெனில் ஒருவர், 'யசமானி யார்? எசமானுக்கு என்ன வேலை?' என்று கேட்டார்கள். (இதுவும் ஒரு கால் நாயுடுவின் தற்பெருமையாகவு மிருக்கலாம்) எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. ஆனால் உள்ளூர கர்வமும், பெருமையும் ஓங்கி நின்றது. பாப்பா! தாயில்லாக் குறையை என் கௌரி ஒரு போதும் உணர்ந்ததே இல்லை. பதினைந்துரூபாய் சம்பளத்தில், ஒரு நாளாவது வயிறு ரொம்ப நான் சாப்பிட்டதில்லை. எனக்குப் பூர்வீகவீடு ஒன்று இருந்தது. அதில் ஆறு ரூபாய் வாடகை வரும். அதைக்கொண்டு கௌரி கேட்கும் சாமான்களை வாங்குவேன். கடைசியில் வீட்டை விற்றுக் கல்யாணம் பண்ணினேன். அவள் கணவன் தங்கக் கம்பி. அவள் பிறந்த பின் என் தேவைகளைப் புறக்கணித்தேன். அவளுக்காகவே இந்த உயிரைக் காப்பாத்தறேன். இல்லாமல் போனால் பச்சைக் கிளிபோல என் சிவகாமி (மனைவி) போன பிறகு இந்த உயிரை வைத்துக்கொள்ளவும் வேண்டுமா? அதெல்லாம் போகட்டும். கௌரி சிங்கப்பூர் போனது தான் எனக்குப் பிடிக்கவேயில்லை. 'அவன் போகட்டும், நீ என்னிடமே இரு' என்றேன். இத்தனை வயசு வளர்த்த என்னை விட,நேற்றுத் தாலிகட்டிய அவன் தான் பெரிதென்று அவனுடன் போனாளே! பதினாறு வருஷங்களாக என் கண் இமை போல காப்பாற்றின, என் குழந்தையின் அன்பில் பாகம் கொள்ள நேற்று முளைத்த அவன் வந்தான். எப்படியாவது என் கௌரி சந்தோஷமாகஇருக்கட்டும். ஆனால்இரண்டு மாதமாக அவளிடமிருந்து கடிதமே இல்லை. பாப்பா, சிங்கப்பூரில் குண்டு விழுந்துடுத்து, சண்டை என்கிறார்களே உனக்குத் தெரியுமா? அப்பாவிடம் விவரமாகக் கேட்கவேண்டும்" என்றான். அவன் உதடுகள் துடித்தன. விவரிக்க முடியாத வேதனை உணர்ச்சி அவன் முகமெல்லாம் படர்ந்து ஓடியது.

ஒரு மாதமாயிற்று. எனக்கு விவாகமாகி விட்டது. நாயுடு இயந்திரம் போல வேலை செய்தானே ஒழிய, முன்பிருந்த கலகலப்பும் உற்சாகமும் இல்லை. மிகவும் பலஹீனனாக இருந்தான். அவன் அன்று வந்தவுடன், "நாயுடு, உனக்கென்ன உடம்பு? கௌரியிடமிருந்து கடிதம் வந்ததா?" என்று கேட்டேன்.

நாயுடு அழுதான்.—"பாப்பா! அவளும் என்னை அவ அம்மா போல மோசம் செய்துடுவாளோ என்னமோ? சிங்கப்பூரை ஜப்பான்காரன் பிடித்துக் கொண்டு விட்டான்னு போஸ்ட் மாஸ்டர் ஐயா சொன்னாரே! அவளைப் போய்ப் பார்க்கணுமென்று மனம் துடிக்குது. சக்தியும் பணமும் வேண்டாமா, ஐயோ! இந்தப் பைத்தியக்காரப் பொண்ணு அப்பவே புறப்பட்டு வரக்கூடாதோ? ஆனா அங்கே அவள் என்ன கஷ்டப்படறாளோ?..... பாப்பா! உனக்கு இன்னிக்கி பம்பாயிலிருந்து கடிதம் கொண்டு வந்திருக்கேன். எனக்கு என்ன இனாம் கொடுக்கப் போறே?" என்று பையிலிருந்து கடிதத்தை எடுத்தான். அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டேன். நாயுடு சிரிப்பைக் கஷ்டப்பட்டு வரவழைத்துக்கொண்டு "கௌரி தேவலை போலிருக்கே!

போன மாதம் கல்யாணமாச்சு. இந்த மாதம் அவருட்டேருந்து வர கடுதாசுக்கு இத்தனை கிராக்கியா? பத்தியா, நாயுடு தயவு வேண்டியிருக்கு!" என்றான்.

அப்பாவிடம் போய், சிங்கப்பூர் வீழ்ச்சியைப் பற்றின விவரங்களை விசாரித்தான். சிங்கப்பூர் பிடிபட்டதையும், ஜனங்கள் தப்பி ஓடுவதையும்பற்றி அப்பா சொன்னார். நாயுடு புழுவாய்த் துடித்தான். அப்பா அவனுக்கு, "நாயுடு, நீ பரோபகாரி! உன் நல்ல மனதுக்கு இந்த வயது காலத்தில் கடவுள் கஷ்டத்தையோ வேதனையையோ தர மாட்டார். தைரியமாயிரு" என்று சமாதானப் படுத்தினார். ஆனால் அவன் களைத்து நடக்க முடியாமல் தள்ளாடினான். அவன் மனதில் என்ன விதமான பயங்கர சிந்தனைகளைக் கற்பனை செய்தானோ?

மறு நாள் நாயுடு வரவில்லை. அவனுக்கு பதிலாக, புதிய தபால்காரன் வந்தான். என் மனது என்னமோ வேதனை செய்தது. புதியவனிடம் நாயுடுவைப் பற்றிக் கேட்டேன். அவன் நாயுடுவிற்கு ஜ்வரமென்றும், ரொம்ப அதிகமா யிருப்பதாகவும் பதினைந்து நாள் லீவில் இருப்பதாகவும் கூறினான்.

இரண்டு நாளைக்குப் பிறகு நாயுடுவின் அக்கா அப்பாவிடம் ஓடி வந்து, நாயுடு நிலைமை ரொம்ப மோசமா யிருப்பதாகவும், ஆகாரமே உட்கொள்ளாமல் சதா "கௌரீ-கௌரீ" என்று பிதற்றுவதாகவும் கூறி அழுதாள். அப்பா அன்று நாயுடுவைப் பார்க்கப் போனார். அவர் போனதும் சற்றுக் கண் விழித்து, "பாப்பா வந்திருக்கா?" என்று கேட்டானும். ஆகவே, மறு நாள் அப்பா என்னை அழைத்துப் போனார். அங்கு போய் அவன் அலங்கோலமாகப் படுத்திருப்பதைப் பார்த்ததும் நான் தேம்பித் தேம்பி அழுதேன். வேறு யாரா யிருந்தாலும், அந்த நிலைமையில் அவனைப் பார்த்தால், கட்டாயம் கண்ணீர் விட்டிருப்பார்கள். அடையாளமே தெரியாதபடி எலும்பெடுத்திருந்தான். முகமெல்லாம் வற்றிப் போயிருந்தது. எங்கள் குடும்ப டாக்டர் வந்து பார்த்து விட்டு 'சூள்' கொட்டி விட்டுப் போய் விட்டார். அது மன நோய்; அன்பின் ஏக்கம்; அதுக்கு மருந்து அவன் குழந்தையின் வரவுதான்!

அப்பா அவன் மாப்பிள்ளைக்கு உடனே வரும்படி தந்தி அடித்தார். அங்குள்ள நிலைமையில் இது பிரயோசன மற்ற செய்கையென்று தெரிந்தாலும், பதில் தந்தி வந்தால், அவர்கள் க்ஷேமத்தைப் பற்றியாவது தெரியாதா என்ற ஒரு ஆசைதான். ஆனால் தந்தி திரும்பி வந்து விட்டது. நாயுடுவின் ஒரே நம்பிக்கையும் தளர்ந்து போயிற்று. மனம் இடிந்து படுக்கையில் கிடந்தான். பிறகு பிரக்ஞையும் போய் விட்டது.

இரண்டு நாளைக்கெல்லாம் நாயுடு நெடுங்காலம் பிரிந்திருந்த தன் மனைவியைத் தேடிச் சென்று விட்டான். அவன் மரணச் செய்தி எங்கள் ஒவ்வொருவருக்கும் துக்கத்தை அளித்தது. இந்த சொற்ப மாதங்களில் அவன் எங்களிடம் நிரந்தரமான ஒரு ஸ்தானத்தை மனதில் ஆகர்ஷித்து இருந்தான். அவன் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்தித்தோம்.

* * *

நாயுடு இறந்த பதினைந்து நாளுக்குப் பிறகு அவன் மருமகனிடமிருந்து அவன் பெயருக்கு ஒரு தந்தி வந்தது. "சௌக்யமாகச் சென்னை வந்து சேர்ந்தோம். கூடிய சீக்கிரம் சந்திப்போம்" என்றிருந்தது. போஸ்ட் மாஸ்டர் அதை வாங்கி சுக்கு நூறாகக் கிழித்து ஜன்னலுக்கு வெளியே எறிந்தார். தௌர்ப்பாக்கியனை நாயுடு தன் புத்திரிமேல் வைத்திருந்த பாசமானது கடைசியில் அவன் உயிரை வாங்கும் நாக பாசமாக மாறியது!

உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும்!

உஷ்ணப் பிரதேசத்திலுண்டாகும் மலேரியா ஜுரத்திற்கு நாளடைவில் தீராத வியாதியாகவும், கொய்னாவால் தடுக்க முடியாததாகவும் ஆகிவிடும் குணமுண்டு. நிரந்தரமாக குணமடைவதற்கு அதிகப்படியாக ஏதாவது அவசியம் வேண்டும்.

உஷ்ணப் பிரதேசங்களில், முக்கியமாக இந்தியாவில், மலேரியா ஜுரத்துக்கு சிகிச்சை செய்வது இலகுவான விஷயமல்ல. ஏனெனில் ஜுரத்துடனிருக்கையிலேயே நோயாளிகள் தீராத குடல் வியாதிகளாலும், பித்தாசய வலிவின்மையாலும், போதிய போஷாக்கு குறைவாலும் அவதிப்படுகிறார்கள். இக்காரணங்களால் கொய்னா சரீரத்தில் சரி பலனளிக்க முடிவதில்லை. மலேரியா சிகிச்சையும் மிகக் கடினமாகிறது.

பைரோடோன் தயாரிப்பில், கொய்னா, கொய்னா பட்டை எனும் சாரங்களுடன் மிகச் சிறந்த மூலிகை சத்துக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான், கொய்னாவால் குணப்படுத்த முடியாத எவ்வளவு கடுமையான முறை ஜுரத்தையும் பைரோடோன் தவறாது குணப்படுத்துகிறது. பைரோடோன் மலேரியா விஷத்தையும் குடலிலுள்ள விஷத்தையும் எடுத்து விடுகிறது; இரத்த அணுக்கள் அழிந்துவிடாமல் தடுத்து விடுகிறது; இரத்த சோகையைக் குணப்படுத்துகிறது; பித்தாசயம், ஈரல் பெருத்திருப்பதை சாதாரண அளவுக்குக் குறைக்கிறது. இப்படியாக வியாதியை வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தி, நோயாளி பூரண ஆரோக்கியத்தைப் பெற உதவுகிறது.

மலேரியாவை ஒழிப்பது

பைரோடோன்

நேஷனல் டிரக் தயாரிப்பு. ஹெட் ஆபீஸ்:-18, கிளைவ் தெரு, கல்கத்தா. சென்னைக்கு பிரதான ஏஜெண்டுகள்:-கே. ராம்னன் அண்டு கோ. (1916): ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட், 80, செம்புதாஸ் தெரு, சென்னை.

ND:20·A·TM



ஜமீந்தார் பூனை

"முத்து"

ஒரு காட்டில் பூனைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டது. ஒரு நாள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு கறுப்புப் பூனை வந்து சேர்ந்தது. அது பிறந்தது முதல் ஒரு நகரத்தில் வசித்து வந்ததனால் மற்றப் பூனைகளோடு சகஜமாகப் பழகவில்லை. அது ஒரு பொம்மை எலியை வைத்துக் கொண்டு தனியாக விளையாடிக் கொண்டிருப்பது வழக்கம்,

வாத்தியார் பூனை அன்று பள்ளிக்கூடம் விடுவதற்கு முன், "சனிக்கிழமை யன்று நமது பள்ளிக்கூடத்திற்கு ஜமீந்தார் பூனை விஜயம் செய்யப் போகிறது. அன்று நீங்கள் விஷமத்தை யெல்லாம் மூட்டைகட்டி வைக்க வேண்டும். சரியானபடி நடந்து கொள்ளாவிடில் தக்க தண்டனை கொடுப்பேன்" என்றது.



சனிக்கிழமை மாலையில் பூனைகள் எல்லாம் வித விதமாக அலங்காரம் செய்து கொண்டு வந்தன. எல்லாம் வரிசையாக பள்ளிக்கூடத்து வாசலில் நின்றுகொண்டு ஜமீந்தார் பூனையைக் குதூகலமாக வரவேற்றன. கறுப்புப் பூனை சந்தோஷத்தினால் குதித்தபோது அதன் பையிலிருந்த பொம்மை எலி கீழே துள்ளிக் குதித்துக் குறுக்கேயும் நெடுக்கேயும் ஓட ஆரம்பித்தது. ஜமீந்தார் பூனை ஆச்சரியத்துடன் அதைப் பிடிக்கக் குனிந்தது. அப்போது அதன் பையிலிருந்து விழுந்த ஒரு கண்ணாடியைக் கறுப்புப் பூனை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டது.

சற்று நேரம் கழித்து எல்லா பூனைகளும் சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்தன. கறுப்புப் பூனை அதன் பக்கத்திலிருந்த ஒரு பூனையிடம், "பால் சாப்பிட்டு ரொம்ப நாளாயிடுத்து. ஜமீந்தார் நமக்கு இன்று நல்ல பாலாகக் கொடுத்தால் எப்படி யிருக்கும்? என்றது.

உடனே ஜமீந்தாரின் சேவகர்கள் கிண்ணம் கிண்ணமாகப் பாலைக் கொண்டு வந்து பூனைகளுக்குக் கொடுத்தார்கள். பூனைகள் வயிறு நிறையக் குடித்தன.

கறுப்புப் பூனையின் சிநேகிதன் அதனிடம் காதோடு, "டேய், இன்னும் இரண்டு நாளைக்கு நமக்கு லீவு கொடுத்தால் கும்மாளம் போட்டு விளையாடலாமல்லவா?" என்றது. கறுப்புப் பூனையும் அதை ஆமோதித்தது.

ஜமீந்தார் பூனை பிரசங்கத்தின் போது சொல்லி வைத்தது மாதிரி "என் விஜயத்தை முன்னிட்டு உங்களுக்கு இரண்டு நாள் லீவு கொடுக்கும்படி உங்கள் உபாத்தியாயரிடம் சொல்லி யிருக்கிறேன்" என்றது.

கறுப்புப் பூனை சந்தோஷத்துடன் குதித்துக் கொண்டே ஓடி ஜமீந்தார் பூனையிடம், "இந்தாருங்கள் உங்கள் கண்ணாடி! நீங்கள் குனிந்த போது கீழே விழுந்தது. தங்களுடைய உயர்ந்த நோக்கத்தையும் பெருந் தன்மையான குணத்தையும் பார்க்கும் போது எனக்குத் தங்கள் சொத்தை வைத்துக் கொள்ள மனம் வர வில்லை. இந்தாருங்கள்" என்று அதை மரியாதையாக ஜமீந்தாரிடம் கொடுத்தது.

ஜமீந்தார் பூனை சிரித்துக் கொண்டே, "ஒரு மந்திரவாதி அந்த மாயக் கண்ணாடியை எனக்குக் கொடுத்தான். அதைக் கையில் வைத்துக் கொண்டு எதை நினைத்தாலும் அப்படியே நடக்கும்" என்றது.

கறுப்புப் பூனையின் முகத்தில் அசடு வழிந்தது. ஓஹோ! இந்தக் கண்ணாடியின் மகிமையால் தான் நமக்குப் பாலும் லீவும் கிடைத்தனவோ! இது தெரிந்திருந்தால் நாமே அந்த மந்திரக் கண்ணாடியை வைத்துக் கொண்டிருக்கலாமே?" என்று நினைத்து வருத்தப்பட்டது.

நமது சித்திரகாரர் அரை குறையாக விட்டுப்போன படத்தை இப்போது பூர்த்தி செய்து விட்டார். சிங்கத்திற்கு எதிரே நின்று கொண்டிருந்த சிறுவனுக்கு இப்போது ஒரு ஆபத்தும் உண்டாகாதல்லவா? படத்திலிருப்பதுபோல் சிங்கத்திற்கு ஒரு கூண்டை அமைத்துவிட நீங்களும் முந்தியே தீர்மானித்திருந்தீர்களானால் நூற்றுக்கு நூறு மார்க்கு போட்டுக் கொள்ளுங்கள்!

உத்யோகஸ்தர் :— அடேய் ! இப்படி இருக்கயே ! வேஷ்டியை நல்லா தோய்த்துக்கட்டி, தலையை வாரி முடிஞ்சு, க்ஷவரம் பண்ணிக்கிட்டு க்ளீனாக இருந்தால் ஏதானும் வேலை கிடைக்குமே !

சோம்பேறி :— அதுக்கு பயந்துகிட்டுத்தானே நான் இப்படி இருக்கேன் !

*　*　*

"எங்கப்பாரு குதிரை மேலே வர சிப்பாயி !" என்றான் குஞ்சு.

"அப்பன்னா சாதாரண சிப்பாயை விட ரொம்ப உசத்தியோ ?" என்றான் பஞ்சு.

"ஆமாம் ! சந்தேகம் என்ன ! எங்கேனாச்சியும் சண்டையின்னா, ஒரே ஓட்டமா ஓடியாந்திடலாமில்ல ?"—குஞ்சு

*　*　*

"உங்கள் அடுத்த வீட்டுக்குப் புதிசா குடித்தனம் வந்திருக்கிறார்களே ! அவர்களுடன் பேச ஆரம்பித்து விட்டீர்களா ?"

"முதல் முதலாக நம்ம வீட்டு நாயும் அவர்கள் வீட்டு நாயும்தான் சண்டை போட்டுக் கடித்துக் கொண்டிருக்கின்றன."

*　*　*

நண்பர் :—உங்கள் பையன் தனக்கு நூற்றுக்கு நூற்றிப் பத்து மார்க் வருமென்று சொல்லிக் கொண்டிருக்கிறான். அதெப்படி ?

தகப்பனார் :—என்னிடம் கூட அப்படித்தான் சொன்னான். எல்லாக் கேள்விக்கும் பதில் எழுதி, பேப்பரில் கேட்காத கேள்வி ஒன்றுக்கும் பதில் எழுதி விட்டானாம் !

*　*　*

தகப்பனார் :— எங்கேடா ஸ்கேல் ! எங்கேயும் காணோமே !

தாயார் :— கடைசியாக உங்கள் சின்னப் பிள்ளைதான் வைத்துக் கொண்டிருந்தான். எங்கே வைத்தானோ ?

தகப்பனார் :— அப்படியானால் பட்சணம் வைத்திருக்கிற உரிக்கு அடியில் பார் ! அங்கேதான் போட்டிருப்பான் !

செருப்புக் கடையில் ஒருவர் ஒரு ஜோடி செருப்பைப் போட்டுப் பார்த்தார். "செருப்பு ரொம்ப மெல்லிசாக இருக்கிறதே ! இங்கிருந்து வீடு சேருவதற்குள் கிழிந்து போய் விடும் போல் அல்லவா இருக்கிறது ! விலை மட்டும் அசாத்தியமாகச் சொல்கிறீர்களே" என்றார்.

கடைக்காரர் :— ஸார் ! இது நடக்கிறவர்கள் போடுகிறவர்களுக்கு இல்லை, மோட்டார் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்காகத் தயாரானது !

*　*　*

தாயார் :— (பதினைந்தாவது தடவையாக) பேசாதேடா கோபு ! நான் சொல்லி விட்டேன், உனக்கு சினிமாவுக்குப் போக நான் காலணா கூடக் கொடுக்க முடியாது ! ஒரே வார்த்தைதான் !

கோபு :—என்ன பிடிவாதம் ! இந்த அப்பா சொல்லுவாரே, உன் புத்திக்ஷணத்துக்கு க்ஷணம் மாறுகிறதென்று ! அது எவ்வளவு தப்பு !

*　*　*

கடன் கொடுத்தவர் :—என்ன ஐயா நீர் ! என்னிடம் இது வரையில் வீட்டை அடைமானம் வைத்திருப்பதாக ஒரு வார்த்தை சொல்லாமல் இருந்து விட்டீரே !

வீட்டுக்காரர் :—என்ன ஸார் ! நான் முதலிலிருந்தே 'வீட்டில் இந்தக் காலத்துக் கேற்றபடி சகல சௌகரியங்களும் செய்து கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு வருகிறேனே !

*　*　*

"குழந்தையின் உண்டியலை உடைத்து, இருந்த பணத்துக் கெல்லாம் எங்காத்துக்காரர் ஒரு 'டென்னிஸ் பாட்' வாங்கி விட்டார்."

"அக்ரமமாயிருக்கே !"

"ஆமாம்னா ! நான் அதுக்கு நவராத்திரியிலே ஒரு புடவை வாங்கிக்கணும்னு ஆசைப்பட்டுண்டிருந்தபோது அப்படிப் பண்ணி விட்டார் !"

வழிக்கு வந்த மாட்டுப் பெண்

எஸ். ஆர். வி.

"உங்களைத் தானே !" என்று கூப்பிட்டாள் சங்கரி. அந்தக் குரலில் அதிகாரமும் அகம்பாவமும் த்வனித்தன.

"இதோ வந்துட்டேன் !" என்று ஓடி வந்தார் நடேசய்யர். மனைவியிடத்தில் அவருக்கு எப்போதுமே பய பக்தியும், பணிவும் உண்டு.

"ரொம்ப பயந்தமாதிரி வேஷம் போடறது ! கடைசியிலே ஒரு காரியத்தையும் கவனிக்கிறதில்லே !"

"ஏன் இப்படி அநியாயமாப் பழி சொல்றே ? நீ சொன்ன எந்தக் காரியத்தைக் கேட்காமே இருந்துட்டேன் ?"

"நன்னா யோசனை பண்ணிப் பாருங்கோ !"

"வீட்டையெல்லாம் ஒட்டடை அடிக்கச் சொன்னியே, அதையா சொல்றே ?"

"இன்னம் யோசனை பண்ணிப் பாருங்கோ !"

"புடவை வாங்கிண்டு வரச் சொன்னே ! சாமான் வாங்கிண்டுவரச்சொன்னே ! அதையெல்லாம் தான் வாங்கிண்டு வந்து கொடுத்துட்டேனே !"

"நம்ப நாட்டுப் பொண்ணைப் பத்திச் சொன்னேனே, மறந்துட்டேளா ?"

"என்ன சொன்னே ? எனக்கு ஞாபகமே இல்லையே !"

"உங்களுக்கு ஏன் ஞாபகம் இருக்கப் போறது ? நேத்திக்கு நீங்க சாப்பிட்டுண்டிருக்கிறபோது சொல்லல்லையா, நான் ?"

"ஞாபகமிருந்தா...செய்யாமே இருப்பேனா ? சாப்பிடற நினைவுலே ...நீ சொன்னத்தைக் காதிலே வாங்கிண்டிருக்க மாட்டேன் !"

"... தகுந்த புத்திமதிகளைச் சொன்னார்..."

"அவ்வளவு அலட்சியம் உங்களுக்கு, என் வார்த்தையிலே!"

"ஏதோ நடந்தது நடந்துடுத்து ...அதை விட்டுத் தள்ளு! இப்போ என்ன செய்யனும், சொல்லு?"

"என்ன செய்யனுமா!...நம்ப மாட்டுப் பொண்ணை நீங்க கொஞ்சம் அடக்கனும்!"

"அதுக் கென்ன, அடக்கிறைப் போறது!"

"நான் எவ்வளவு சொல்லியும் அவள் வழிக்கு வரதாகக் காணல்லே!"

"அப்படின்னு,... கண்டிக்க வேண்டியதுதான்!"

"சதா புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் சண்டை!"

"நம்ப மணியோடே சண்டையா போடறு?"

"தினம் சண்டைதான்! அவன் சொல்றத்தைக் கேட்கிறதே இல்லே! எப்போ பார்த்தாலும் அவா அறையிலே ஒரே கலாட்டாவாத்தான் இருக்கு! இதுக்கு ஒரு வழி பண்ணித்தான் ஆகனும்! தேமேனு பாவம், மணி ரொம்ப வருத்தப் படறுன்!"

"அப்படியா, சமாசாரம்? அதுக்கு ஒரு வழி பண்றேன் இரு! இன்னி சாயந்திரமே அவளைக் கூப்பிட்டு நன்னுக் கண்டிக்கிறேன்!"

இவ்விதமாக வாக்குறுதி யளித்துவிட்டு நடேசய்யர் அன்று சாயங்காலமேயே மாட்டுப் பெண் மீனுவைத் தனியாக ஒரு அறைக்கு அழைத்துக் கொண்டு போய் அவளுக்குத் தகுந்த புத்திமதிகளைச் சொன்னுர். இது நடந்த ஒரு வாரத்திற் கெல்லாம் சங்கரி அம்மாளுக்கு வாயெல்லாம் பல்லாயிருந்தது. உற்சாகம் தாங்கமுடியவில்லை. தன் புருஷனிடம் ஆவலோடு ஓடிவந்து, "இப்பத்தான் நம்ப மாட்டுப் பெண் வழிக்கு வந்திருக்கா!... புருஷன் பெண்டாட்டிக்குள்ளே இப்போ ஒரு சச்சரவும் கிடையாது! எல்லாம் அமைதியாக இருக்கு!..." என்று விஷயத்தைத் தெரிவித்தாள். நடேசய்யர் சற்றுத் தலையை நிமிர்த்திக் கொண்டு "எல்லாம் கண்டிக்கிற திறுசுலே இருக்கு! அன்னிக்கு நாலு மணி நேரம்னு அவளுக்குப் புத்திமதி சொன்னேன்!" என்று பெருமையடித்துக் கொண்டார்.

"அது சரி, அவளுக்கு என்ன புத்திமதி சொல்லிக் கொடுத்தேள்?...... சொல்லுங்களேன், கேட்கலாம்!"

"புருஷன் பெண்ஜாதிக்குள்ளே சச்சரவில்லாமே, அபிப்பிராய பேதமில்லாமே, அமைதியா இருக்கிறத்துக்கு உண்டான யுக்தியைச் சொல்லிக் கொடுத்தேன்."

"என்ன சொல்லிக் கொடுத்தேள்னு கேட்டா...எதை எதையோ சொல்லிண்டிருக்கேளே!"

"என்ன சொல்லிக் கொடுத்தேன்னு கேட்டா,......'புருஷன் ஒரு வார்த்தை சொன்னு நீ பத்து வார்த்தை சொல்லனும். இப்படியே பதிலுக்குப் பதில் சொல்லிண்டே வந்தா புருஷன் அசந்து போயிடுவான்! அப்பறம் உனக்கு தாசானுதாசனு இருப்பான்! அவனுடைய சொந்த அபிப்பிராயங்களை வெளியிலே சொல்லவே தைரியமிருக்காது!... அப்பறம் உன் இஷ்டப்படியேதான் உன் புருஷன் நடப்பான்! ...ஒரு சச்சரவும் இருக்காது. எல்லாம் அமைதியா இருக்கும்' அப்படின்னு சொன்னேன்! எல்லாம், என் சொந்த அனுபவத்தைத்தான் சொன்னேன்; வேறே புதிசா ஒண்ணையும் சொல்லிடல்லே!"

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்
வாஸனு திரவியங்கள்

★ அத்தர்
★ புனுகு
★ ஜவ்வாது
★ அரகஜா
★ ஊதுபத்தி
★ பன்னீர்
★ சந்தனம்
★ தசாங்கம்

ஸோல் ஏஜண்ட்ஸ்:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி,
மதராஸ்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:
M/s ஜ்வாலாலிங் & சன்ஸ், கோயமுத்தூர்.

தந்தையும் தனயனும்

"தேவன்"

"நீங்கள் எதற்காக அந்தக் காரியம் செய்கிறீர்கள்? பெரிய பிசகு என்று தெரிந்தும் கூடச் செய்யலாமா?" என்று கேட்டாள் ஸரஸா அன்பொழுகும் குரலுடன்.

சிவராமனுக்கு அவள் குரலிலிருந்த கனிவும் பரிவும் விஷமாக இருந்தன. அவன் மனக் கஷ்டத்தை அவை இன்னும் அதிகமாக்கின. மேஜையின் மீது உட்கார்ந்து, தலையைக் கைகளில் ஊன்றி யோசனை செய்தான். ஒரு யோசனையும் தோன்றவில்லை.

"உனக்கு நல்ல ஒட்டியாணமாக ஒன்று செய்ய வேண்டுமென்று ஆசை வந்து விட்டது, ஸரஸா! என் சம்பாத்யத்திலும், அப்பா சம்பாத்தியத்திலும் என்றைக்குப் பணம் சேர்த்து, ஒட்டியாணம் செய்து போடுவதென்று இப்படிச் செய்து விட்டேன்.

...பெரிய பிசகு என்று தெரிந்தும்...

ஆசை, பொல்லாத ஆசை. யாருக்கும் தெரியாதென்று அந்தப் பணத்தைக் கையாண்டு விட்டேன்."

"ஆபிஸில் கண்டு பிடித்தார்களே, குற்றத்தை அப்போது ஒப்புக் கொண்டீர்களா?"

"ஒப்புக் கொள்ளாமலா? மானேஜிங் டைரக்டர் என்னைத் தனிமையில் அழைத்து விசாரித்தார். 'இப்படிச் செய்யலாமா நீ?' என்றார். அவர் முன்னால் அழுதுவிட்டேன். 'இதைப் போலீஸுக்கு அறிவித்தால் நீ ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும், தெரியுமா?' என்றார். பிறகு நான் மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டபோது, பணத்தைக் கொண்டு வந்து முதலில் கட்டு; பிறகு சொல்கிறேன்' என்றார். அவர் குரலைப் பார்த்தபோது, மன்னித்து விடுவார் என்றுதான் தோன்றுகிறது!"

"பின் இந்த ஒட்டியாணத்தை விற்று, கொண்டு போய்க் கட்டுங்களேன்!"

"அவசரப்படாதே, ஸரஸ்! இதை அப்பாவிடம் ஒளிக்க முடியாது என்று, எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டேன். 'ஒட்டியாணம் பண்ணிப் போட வேண்டுமென்றால், திருடுவது நியாயமா?' என்று கோபித்துக் கொண்டார். இருந்தாலும், அப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை அல்லவா? நான் இவ்வளவு ஆசைப் பட்டு வாங்கின ஒட்டியாணத்தை விற்க வேண்டாம்; அவர் ஆபீஸிலேயே பணத்தை எப்படியாவது ஏற்பாடு செய்து கொண்டு வருகிறதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்."

"என்ன இருந்தாலும் நீங்கள் செய்தது பிசகு தான்" என்றாள் ஸரஸா.

அப்போது, கீழே வாசற் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

"அப்பா வந்துட்டார்!" என்று சிவராமன் எழுந்து, வேகமாக மாடிப் படிகளில் இறங்கினான். பின்னாலேயே நிதானமாக ஸரஸா இறங்கினாள். அதற்குள்ளாக சிவராமனின் தாயார் கதவைத் திறந்து விட்டாள்.



"எல்லாம்தான் சொல்லி விட்டீரே! ......"

சிவராமனின் தகப்பனார் சபேசய்யருக்கு, "ரத்னம் அண்ட் ஸ்வாமி" கம்பெனியில் உத்யோகம். முப்பது வருஷங்களாக அந்தக் கம்பெனியின் நாற்காலியொன்றில் அமர்ந்து வேலைபார்த்திருக்கிறார். யோக்யர் என்று பெயர் வாங்கி விட்டார். கம்பெனியின் முதலாளிகளான ரத்னம் பிள்ளையும், ஸ்வாமி முதலியாரும் அவரிடம் மதிப்பு வைத்திருந்தார்கள். ஸ்வாமி சிறிது பணத்தில் கண்டிப்பானவர்; ரத்னம் தாராளமாயிருப்பவர். இரண்டு பேருக்கும் வெகு ஒற்றுமை. சபேசய்யர் தமது பிள்ளையின் உத்தியோகத்தையும் நல்ல பெயரையும் காப்பாற்றுவதற்காக, ரத்னத்தைத்தான் பணம் கேட்கப் போவதாகச் சொல்லி விட்டுச் சென்றிருந்தார்.

அவர் போன காரியம் பலிதமாகியிருக்க வேண்டுமென்று அவருடைய முகத்தைப் பார்த்தவுடனேயே விளங்கிற்று.

"போன காரியம் பழம்" என்றார்.

சிவராமனின் முகம் சிறிது மலர்ந்தது. ஆனால் மௌனமாகவேயிருந்தான்.

"ரொம்ப சிரமப்பட்டு விட்டேன். ரத்னத்தைத் தனியாகப் பார்ப்பதென்பது முடியாதென்றே தோன்றி விட்டது. நல்ல வேளையாக இன்று ஸ்வாமிக்கு சீக்கு அதிகமாகி, தாம்பரத்துக்குப் போகிறார். சட்டென்று ரத்தினத்தைப் பார்த்துக் காரியத்தைச் சாதித்துக் கொண்டேன். 'இஷ்டப் பட்டபோது திருப்பிக் கொடு போதும்' என்று சொல்லி, 'செக்' கொடுத்து விட்டார்" என்றார் சபேசய்யர்.

"போகிறது! இனி மேல் சிவராமன் ஆபீஸ்காரரைப் பார்த்து நல்ல வார்த்தையாகச் சொல்லுங்கள்!" என்றாள் தாயார் கவலையுடன்.

"இப்போதே போகலாமே!... புறப்படேண்டா, சிவராமா" என்றார் சபேசய்யர்.

மானேஜிங் டைரெக்டர் சிவராமனைப் பார்த்ததும் அலட்சியமாகத் திரும்பினார். சபேசய்யர் அவர் கையில் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து விட்

டுத் தமது புதல்வனைப் பார்த்து, "அடேடே! அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்! இனி மேல் இந்த மாதிரி தப்புத் தண்டாக்களில் தலை யிடுவதில்லை என்று சொல்" என்று சொன்னார்.

டைரெக்டர் பணத்தை வாங்கி எண்ணி மேஜையில் வைத்தார்: பிறகு சபேசய்யரைப் பார்த்து, "நீங்கள் போகலாம்!" என்றார்.

"பையன் தெரியாமல் செய்து விட்டான். நீங்கள் இந்த ஒரு தடவை மன்னித்து வைத்துக் கொள்ள வேண்டும். இனி மேல் செய்ய மாட்டான்!" என்று கெஞ்சினார் சபேசய்யர்.

"ஸார்! அது என் கையில் இல்லை. என்னைப் போல் இந்தக் கம்பெனியில் நாலு டைரெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் சேர்ந்து என்ன முடிவு செய்கிறார்களோ, அதன்படியே நடக்கும்!" என்றார் அவர் உணர்ச்சியற்ற குரலில்.

"தாங்கள் அப்படிச் சொல்லவில்லையே! மன்னித்து விடுவதாகத்தானே அப்போது சொன்னீர்கள்!" என்றார் சபேசய்யர்.

"அப்போது அப்படித்தான் சொன்னேன்! எதற்கும் நாளை முதல் உங்கள் பிள்ளை ஆபீஸுக்கு வரட்டும்! பார்க்கலாம்!"

"ஸார்! தயவு செய்யணும்! சிறு பிள்ளைத் தனமாக நடந்து கொண்டு விட்டான்...என்னைப் பற்றி நீங்கள் 'ரத்னம் அண்ட் ஸ்வாமி' முதலாளிகளில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்... தயவு வைத்துப் பையனை ஒரே ஒரு தடவை மன்னித்து வேலைக்கு வைத்துக் கொண்டு விட வேண்டும். மறக்கவே மாட்டேன்..." என்று சபேசய்யர் கெஞ்சினார்.

ஆனால் அந்த ஆசாமி, "எல்லாம் தான் சொல்லி விட்டீரே! போய் வாரும்! நாளை சாயந்திரத்துக்குள் இரண்டில் ஒன்று தீர்ந்து விடும்!" என்று சொல்லி, சட்டென்று உள்ளே போய்விட்டார்.

தந்தையும் தநயனும் திரும்பும் போது சிறிது நேரம் ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. பிறகு தகப்பன், "எனக்கென்னமோ மன்னித்து வேலையில் வைத்துக்கொண்டு விடுவான் என்றுதான் தோன்றுகிறது. பார்வைக்கு மிடுக்காகத்தான் இருக்கான்..." என்றார்.

"எனக்கும் அப்படித்தான் படுகிறது. இல்லாவிட்டால் எதற்காக நாளை முதல் என்னை வரச் சொல்கிறார்? லகுவில் மன்னித்து விட்டதாக நாம் எண்ணிக் கொள்ளக் கூடாதென்று தான் இப்படியெல்லாம் பேசுகிறார்" என்றான் பிள்ளையாண்டான்.

* * *

மறு நாள் காலை தந்தையும் தநயனும் தங்கள் தங்கள் ஆபீசுகளுக்கு கவலையுடன் தான் சென்றார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. மாலையில் எப்போது ஆபீஸிலிருந்து திரும்புவார்கள் என்று வீட்டில் மாமியாரும் மாட்டுப் பெண்ணும் காத்திருந்தார்கள்.

மாலைப் பொழுது போய் இருட்டு வந்தது. இரண்டு புருஷர்களும் வீடு திரும்ப வில்லை. நாழிகை ஏற ஏறப் பெண்களுக்குக் கவலையும் அதிகரித்து வந்தது.

உத்யோகத்தில் வைத்துக் கொள்ள முடியாதென்று சொல்லி, தன் புருஷன் ஏதாவது செய்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று ஸரஸா அஞ்சினாள். மணிக்கொரு தேங்காயாக வேண்டிக் கொண்டு, பிள்ளையாருக்கு நான்கு தேங்காய்கள் உடைக்கப் பிரார்த்தனை செய்துகொண்டு விட்டாள். வாசற் கதவு தட்டும் சத்தம் கேட்டது. திறந்தவுடன் சிவராமன் வந்தான். ஸரஸா ஒரு நீண்ட மூச்சு விட்டாள். அப்பா! மனஸுக்கு என்ன நிம்மதி!

"அம்மா! என்னை மன்னித்து விட்டார் டைரெக்டர். மற்ற டைரெக்டர்களுக்குச் சொல்லவேயில்லை; மூன்றும் மனுஷருக்குத் தெரியாமல் காரியம் நடந்து விட்டது!" என்றான்.

"உங்கப்பா எங்கேடா! அவருக்குச் சொன்னாயா?" என்று கேட்டாள் தாயார்.

"அப்பா இன்னம் வரவில்லையா?" என்று பர பரப்புடன் சிவராமன் விசாரித்தான்.

அப்போது வாசற்படியில் காலடிச் சத்தம் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சபேசய்யர் ஆபீஸைச் சேர்ந்த ஒரு டவாலிச் சேவகன் நின்றான். அவன் முகத்தைப் பார்த்ததுமே எல்லாருக்கும் பகீரென்றது.

"ஸாமி! உங்க ஐயாவை 'அரெஸ்ட்' பண்ணி யிருக்காங்க!" என்றான் அவன்.

"என்ன! அரெஸ்டா! எதற்காக?" என்று எல்லாரும் கேட்டார்கள் ஒரு குரலாக.

"அவர் சின்ன எஜமான் ஸ்வாமி முதலியார் கையெழுத்தைப் போட்டு, நேத்து ஆயிர ரூபாய் ஆபீஸ் பணத்தை எடுத்துட்டாராம். பெரிய ஐயா கண்டு பிடிச்சுக் கேட்டப்போ, 'ஆமா'னு ஒப்புக்கிட்டாரு. உடனே போலீசுலே பிடிச்சுக் கொடுத்திட்டாங்க! விசயம் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்!"

சிவராமனுக்கு ஒரு பெரிய உண்மை வெளியாயிற்று. தன்னைத் திருட்டுக் குற்றத்தி லிருந்து தப்ப வைக்க, தகப்பனார் ஒரு திருட்டுச் செய்து விட்டார்!

ரத்னத்தைப் போய்ப் பார்ப்பதில் உபயோக மில்லை; அவர் அசைய மாட்டார். என்ன செய்யலாம்? சிவராமன் யோசித்தான்.

* * *

பொழுது புலரும் சமயம். ஒரு மோட்டார் "ரத்னம் அண்ட் ஸ்வாமி"யின் பெரிய எஜமானராகிய ரத்னத்தின் வீட்டு வாசலில் ஊதியது. இவ்வளவு தைரியமாக விடியற் காலையில் ஹார்ன் அடிப்பது யார் என்று பார்க்க வந்த ரத்னம் திடுக்கிட்டார். வண்டியின் முன் ஸீட்டில் சிவராமன் உட்கார்ந்திருந்தான். பின் ஸீட்டில் ஸ்வாமி—முதல் நாள் தாம்பரம் புறப்பட்டுச் சென்ற ஸ்வாமியே-உட்கார்ந்து 'கொல்லு கொல்'லென்று இருமிக்கொண்டிருந்தார்.

......முடிவு சுபமாகவே இருந்தால் சரிதானே !......

"என்ன காரியம் செய்து விட்டீர்! சபேசய்யரைப் போலீஸில் காட்டிக் கொடுத்து விட்டீராமே!"

"ஆமாம்..."

"என்ன ஆமாம்! நானே கையொப்பம் போட்டு வாங்கியிருக்கிற பணத்தை அவர் பொய்க் கையெழுத்துப் போட்டு வாங்கியதாகச் சொல்வதாவது!"

"இல்லை, அவரே அதை ஒப்புக் கொள்கிறாரே!"

“ஒப்புக் கொண்டால், அவரைப் போலப் பைத்தியக்காரர் இல்லை! எனக்கு உடம்பு சௌக்கியமாயில்லாதனாலே ஒரு மாதிரியாகக் கை யெழுத்துப் போட்டேன். அவ்வளவுதான்!”

“நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படியென்றால், அந்த மனிதர் எதற்காகப் பொய் சொல்லி, ஜெயிலுக்குப் போகிறார்?”

“நம்மைப் போல் ஒருத்தரிடம் உண்மையாக முப்பத்தினாலு வருஷம் வேலை செய்ததற்கு, இவ்வளவு பிரதி பலன் கிடைக்கிறதே என்றுதான் ஒப்புக் கொள்கிறார்! ...முதலில் அவரை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யும்!” இன்றைக்கு அவர் ஆபீஸுக்கு வர வேண்டும், தெரிந்ததா?”

“இதற்கு நீங்கள் இவ்வளவு தூரம் ஓடி வருவானேன்?... அதுவும் உடம்பு அசௌக்யமான நிலையில்? டெலிபோனில் சொன்னால் கூட...”

“பரவாயில்லை! நல்ல மனிதர்களை ரொம்ப நாம் கஷ்டப் படுத்தப் படாது என்றுதான் ஓடி வந்தேன். உடனே கவனியும்!” என்று சொல்லி, நிற்காமல் காரை விடச் சொன்னார்.

ரத்னம் தலையைச் சொறிந்து கொண்டு, “இந்த மனுஷர் ஒன்றும் தெரியாதவராக இருக்கிறாரே!” என்று உள்ளே சென்றார்.

ஆனால், ரத்னத்துக்குத் தெரிந்ததை விட ஸ்வாமிக்கு அதிகம் தெரிந்திருந்தது. சிவராமன் தான் தனது கதையை ஆதியோடந்தமாகச் சொல்லி, அவரது மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு விட்டானே! ஸ்வாமிக்கு வந்திருந்த வியாதியும் கூட ஒரு விதத்தில் அவர் மன மாறுதலுக்குக் காரணமாயிருந்ததென்று பின்னால் சபேசய்யருக்குத் தோன்றியது. “தாம் இருக்கும் சொற்ப காலத்தில் ஒரு வருக்கும் கெடுதல் செய்ய வேண்டாம்” என்று எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருந்ததாம். சிவராமனே தன் வாசாலகத்தினால் தான் அவரை வழிக்குக் கொண்டு வந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தான். அது எப்படியிருந்தாலும், முடிவு சுபமாகவே இருந்தால் சரிதானே!

சிவராமன் ஒரு நாள் தன் மனைவியின் ஒட்டியாணத்தை எடுத்துக் கொண்டு போய் ஸ்வாமியிடம் பணத்துக்குப் பதிலாகக் கொடுக்கப் போனபோது, அவர் “தம்பி! இதை உன் மனைவிக்கே போட்டு வை! அவளைப் பார்க்கும் போதெல்லாம் ‘இனி நான் தவறக் கூடாது’ என்ற எண்ணம் உனக்கு வரும்” என்று சொல்லி அனுப்பினார்!

‘ஸ்டாண்டர்டு துணிகள்

—(::)—

அதிக வரும்படி இல்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் தகுதியான விலையில் சர்க்கார் ஏற்பாட்டின்மேல் தயாரிக்கப்பட்ட ஸ்டாண்டர்டு காரிக்க ஷர்ட்டிங்குகள், வேஷ்டிகள், புடவைகள் லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளிடம் கிடைக்கும்.

“பகுத்தறிவு”ப் போட்டி - 359



மூன்று கூபன்களுக்குக் கட்டணம் ரூ. 1.

தனிக் கூபனுக்குப் பிரவேசக் கட்டணம் அணா 8.

முடிவு தேதி 13-11-43

முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) :....... கார்த்திகை அடை மழை என்பது பழமொழி யானாலும், இந்தக் காலத்திலே மழை தன் இஷ்டப்பட்ட போதுதான் பெய்கிறது என்றிருக்கிறது. நெ. 1. கட்டத்திலிருந்து இடமிருந்து வலமாக நான்கு வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ. 1. குறிப்பிற்குச் சரியான வார்த்தை நான்கு எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது. ஐப்பசி சரியான விடை. வெள்ளைக் கட்டத்திற்கொரு எழுத்து வீதம் எழுதப்பட்டிருக்கிறது. இதுமாதிரி எல்லா விடைகளையும் கண்டு பிடிக்க வேண்டியது.

(மற்ற விதிகள் முன்பு இருந்தது போல்தான்)

“பகுத்தறிவு”ப் போட்டி - 359

1 ஐ	ப்	2 ப	3 சி	■	4 அ		5	ல்	■
6 ய		து	ண	7	■	8	த்	து	9
ஞ	■	10		ட	11 ஆ	■	தி	■	சு
ர்	■		■	12 ப		■	■	13	வு
■	14	ம்	15 பு	■	■	16 கா	■	ர	■
■	■	■		■	■	17	18 சு		19 பு
20	21		வா	22 தி	■			■	
ச்	ப்	■			■			■	ளா
23 சு		ரூ 5000	முடிவு தேதி	13-11-43			24	ல	
ம்	■	25 ஆ			ப		ம்	■	■

பெயர்.

விலாசம்.

ம. ஆ. ரசீது நெ. கூபன் நெ......

இங்கே கத்தரிக்க

“பகுத்தறிவு”ப் போட்டி - 356 — குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. தீபாவளிப் பண்டிகையின் போது, சிறுவர் இதை பயமின்றிக் கொளுத்திக் காட்டுவர்.

4. முன் காலத்தில் புது மாப்பிள்ளை தலை தீபாவளிக்கு மாமனார் வீடு சென்றால், அவருடன் பெண்ணை உட்கார வைத்து வேடிக்கையாக இது செய்வார்கள்.

6. தீபாவளிக்கு முதல் நாள் விடிய விடிய ஜவுளி இது திறந்திருக்கும்.

7. பெண்ணைப் பெற்றவர்கள் இது செய்ய ஆசைப்பட்டால் நடக்குமா ஐயா?

10. சரியான இது நன்றாகக் கேட்க வேண்டுமானால், பாகவதர் எதிரிலே போய் உட்கார்ந்து கொள்ளவேணும்.

12. சில மாப்பிள்ளைகளுக்கு தலை சீவிக்கொண்டு வெளியில் புறப்படவே ஒரு ... ஆகிவிடும்.

14. சில நகர்களில் இது பங்கிடப்படுவதால், சம்பந்திகள் கூட்டமாக அவ்வூர்களுக்கு மாப்பிள்ளையோடு தலை தீபாவளிக்கு வர மாட்டார்கள்.

15. அசைவு இல்லாமல் நிறுத்தி விடுதல்.

17. இதிலே கோல் கொண்டு குத்திக் கொள்வாருமுண்டோ?

18. இங்கே ஓடுகிறது கங்கை.

19. நிலை.

20. சந்தைக்குப் போய் இந்த உயிர்ப் பிராணியை வாங்கி வருவதுண்டு.

21. இது இல்லை என்றால், விவசாயி அழத்தான் செய்வான்.

22. ஒரு அரண்மனை என்றால், அதிலே ஒரு ...... இருக்க மாட்டாரா என்ன?

23. இந்தக் காலத்திலே, ... வேஷ்டி வாங்குவது லேசல்ல.

24. ஒருவனிடம் இது இருக்கிறதென்பதை, அவனது பேச்சோ, முகமோ காட்டுமே!

மேலிருந்து கீழ்

1. மாப்பிள்ளை தீபாவளிக்கு வந்திருக்கிறார்; அவருக்கு நல்ல ...... செய்ய வேணுமென்று ஆசைப்படாத மாமியாரும் உண்டா?

2. இந்த வருஷத்திலே ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது.

3. ...... உதயமானதும், மனிதன் சுறுசுறுப்புள்ளவனாகிறான்.

5. உருத் தெரியாதுபோயிருக்கும் குழப்பம்.

8. இது மாமிசம் சாப்பிடாது.

9. ......க்குப் பல வாசல்களுண்டு.

11. தஞ்சை ஜில்லாவைப் பொன்னாடாக்கிக் கொண்டிருக்கும் புண்ணிய நதி.

13. மண்மீது கொள்ளும் ஆசை கெட்டுக் கிடக்கிறது.

14. தீபாவளி யன்று ......யில் எழுந்து தைலஸ்நானம் செய்வார்கள்.

15. இதிலே பூவிருந்தால் பார்க்க அழகாகவே இருக்கும்.

16. யுத்தம் மும்முரமாக நடக்கும் இந்தக் காலத்திலே, இதைத் தயாரிப்பதற்கான சாமான் தாராளமாக கிடைக்காதுதான்!

17. போன வருஷம் தீபாவளிக்கு இதற்கென்று செலவழித்ததைவிட, இவ்வருஷம் விலை உயர்வால் அதிகம் செலவிட வேண்டியிருக்கும்.

21. மாடுகள் இதை உத்சாகத்தோடு சாப்பிடும்.

22. பொறுமை கொஞ்சம் குறைந்திருக்கிறது.





"பகுத்தறிவு"-353-முடிவு

முதற் பரிசு

ரூ. 1000

41 பேர்களுக்கு

தலைக்கு ரூ. 24-6-0

•

சரியான விடை அனுப்பிய கீழ்க் கண்ட 41 நபர்களுக்கும் முதற் பரிசுத் தொகையான ரூ. 1000-மும் சமமாகப் பங்கிடப்பட்டு தலைக்கு ரூ. 24-6-0 விதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசுத் தொகை 9-10-43 அன்று அனுப்பப் பெற்றது.

இரண்டாவது பரிசு பெற்றவர்கள் ஜாபிதா அடுத்த வார 'நாரத'ரில் வெளியிடப்படும்.



We hereby certify that the above is the solution in original deposited with us by *Ananda Vikatan* on 28-8-43 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For THE INDIAN BANK, LTD.

[signature]
6.X.43.
Secretary

(1) டி. தேவராஜுலு நாயுடு, c/o அப்துல் காதர் சேட் & கம்பெனி, 302, 303, சைனா பஜார் ரோடு, சென்னை. (2) டி. பி. ராகவராவ், 22, அம்மன் கோயில் தெரு, பி. டி. சென்னை. (3) கே. எஸ். சந்தானம், 3, வியுனோர்ட் தெரு, ராயப்பேட்டை. (4) பி. ஏ. கணேசய்யர், 58, கீழ வீதி, சிதம்பரம். (5) வி. கே. கிருஷ்ணமூர்த்தி செட்டியார், எண்ணெய் வியாபாரம், திண்டிவனம். (6) டீ. ஆர். வேணுகோபால் செட்டி, தர்மராஜா கோவில் தெரு, ஆரணிபாளையம். (7) வி. என். ராமச்சந்திரன், 90, கச்சேரி வீதி, திருப்பத்தூர். (8) டி. என். ராஜகோபால செட்டி, அய்யன் கடைத் தெரு, தஞ்சாவூர். (9) ரா. மீனாக்ஷிசுந்தரம், கொத்தத் தெரு, மாயவரம். (10) டி. என். மணி அய்யர், ஸ்ரீ வெங்கட்ரமண கபே, அய்யம்பேட்டை. (11) எம். எஸ். கைலாஸ குருக்கள், மஞ்சக்கண்ணி. (12) டி. என். காமாக்ஷி அம்மாள் c/o வி. ஆர். முத்துஸ்வாமி அய்யர், மிராஸ், உமையாள்புரம். (13) பி. பட்டம்மாள், c/o எம். பாலசுப்ரமணிய அய்யர், மிராஸ்தார், புதுச்சத்திரம் கிராமம். (14) பொ. கு. ராஜகோபால் பத்தர், அங்காளம்மன் கோவில் சந்து, திருச்சி. (15) எம். குமாரசாமி பத்தர், 103, பெரிய கம்மாளத் தெரு, திருச்சி. (16) கே. ஆர். சுப்பய்யர், 16, பெரிய சௌராஷ்ட்ரத் தெரு, திருச்சி. (17) எம். கே. ஆர். சாரி, 65, மணியக்காரத் தெரு, திருச்சி. (18) ஆர். சுப்பாச்சார், மாயனூர். (19) எஸ். ஷேக் அலியார் ஷா சாயபு, ரிக்கார்டு அட்டெண்டர், இராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டு, மதுரை. (20) நீலமேகம் ஜா. சேஷய்யர், (தொடர்ச்சி 64ம் பக்கம் பார்க்க)





(62ம் பக்கத் தொடர்ச்சி)

9, மால் 7வது தெரு, மதுரை. (21) ஜே. என். நரசிம்மாச்சாரி, 33, கான்சா மேட்டுத் தெரு, மதுரை. (22) பி. பி. கோவிந்தய்யர், 8, மாணிக்கா கிருஷ்ணசாமி சந்து, மதுரை. (23) என். எஸ். ராமலிங்கய்யர், மால் 5வது தெரு, மதுரை. (24) கே. சிவசுப்பிரமண்யம், தெற்குத் தெரு, வத்தலக்குண்டு, (25) எஸ். ஆர். சுப்பிரமணியர், தெற்குத் தெரு, வத்தலக்குண்டு. (26) நீ. துரைச்சாமி ஆச்சாரி, பெரிய கடை பஜார், அருப்புக்கோட்டை. (27) டாக்டர் வி. வி. ராஜன், எல். எம். பி., கரரைக்குடி. (28) எ. ஸி. ராமசாமி நாடார், நார்சாஹி புரம், ஸ்ரீ வில்லிபுத்தூர். (29) திருமலை பண்டிதர், பார்பர் ஷாப், ரயில்வே பீடர் ரோடு, திருநெல்வேலி டவுன். (30) சு. நடராஜன் செட்டியார், வண்டி மரிச்சம்மன் கோவில் தெரு, தூத்துக்குடி. (31) டி. செண்பகம் பிள்ளை, மேல ரத வீதி, திருச்செந்தூர். (32) எஸ். மாரிமுத்து, மகாராஜபுரம். (33) பி. என். ரங்கய்யா, 137, ராஜவீதி, கோவை. (34) மூர்த்தி, டி. ஆர்., ஈரோடு. (35) என். கிருஷ்ண மூர்த்தி, கீழ்த் தெரு, தர்மபுரி. (36) பி. வி. ராமசாமி அய்யர், ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்ஸ், பிராட்வே, எர்ணாகுளம். (37) ஜான் ஜேசுதாசன், மிஷன் ஆஸ்பத்திரி, மார்த்தாண்டம். (38) ஏ. ராமநாத அய்யர், 1344, கிருஷ்ணமூர்த்திபுரம், மைசூர். (39) ஈ. பி. பணிகர், 172, ரஸ்தாஸ்பெட், பூனா சிடி. (40) பி. ஜி. சுப்ரமணியம், c/o மெஸர்ஸ் வின்டாஸ் லிமிடெட், பாலார்ட் எஸ்டேட், பம்பாய். (41) ஆர். பி. தேஸ்மா, c/o கே. எச். ராஜகோபாலய்யர் அண்டு சன்ஸ், புரன்புரி பகால், சூரத்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியாவில் முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி, வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-43 தேதியில்)	ரூ.	27,57,336
ரிஸர்வ் நிதி	ரூ.	29,00,000

மொத்த ஆஸ்திகள் ரூ. 8 கோடிக்கு அதிகம்

N. கோபால அய்யர் (செக்ரடரி).

வெளிவந்து விட்டது!

ஆனந்த ரகஸ்யம்

அல்லது யோகாசனப் பயிற்சி

(ஐந்தாம் பதிப்பு)

பங்களூர் ஸ்ரீ எஸ். சுந்தரம் எழுதியது

20 ஆப்டோன் படங்களுள்ளது. சிறுவர் முதல் கிழவர் வரை. சுலப முறைகளும். ஆசிரியர் முன்னிலையில் கற்றுக் கொள்வது போலவே விவரங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-0-0

எல்லா ஆ. வி. ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

ஆனந்த விகடன் — சென்னை.

Edited Printed & Published by S. S. Vasan at the Ananda Vikatan Press, 140, Pophams Broadway, Madras.

ஸாகரில் : வெள்ளி, சனி, ஞாயிறு: 3 காட்சிகள்: 2-30, 6-15, 10-0
மற்ற நாட்களில் : 2 காட்சிகள்: 6-15, 10-0
கிரௌனில் : சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்:
3 காட்சிகள்: 2-30, 6-15, 10-0
மற்ற நாட்களில் 2 காட்சிகள்: 6-15, 10-0

Registered No. M. 2135



அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா!

... ஆம், களைப்பையும் போக்குகிறது!

... ஆமாம்மா — ஆனந்தத்தையும் அளிக்கிறது!

தினசரி விநோலியா சோப்பை உபயோகித்து சுகத்தை விரும்பும் மனிதர்களைக் கேளுங்கள். அவர்கள் இது மிகவும் ஆச்சர்யமாக சுகமளிக்கும் என்றும், கோடைகாலத்தில் ஒரு சிறந்த வரம் போன்றதென்றும் சொல்லுவார்கள். அதனுடைய வெண்மையான நுரை குளிர்ச்சியையும், மலர்ச்சியையும் கொடுக்கிறது. அதனுடைய பிரத்தியேகமான வாசனை குதூகலத்தை அளிக்கிறது. மிகவும் களைப்படைந்த நரம்புகளுக்கு உத்சாகத்தை ஊட்டுகிறது.

விநோலியா
ஒயிட் ரோஸ் சோப்பு